கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை

779/2-5

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
20 MAY 1957
MADRAS

13

செய்திகள்

கலைமகள் வெள்ளி விழா

தமிழ் நாட்டின் சிறந்த மாதப் பத்திரிகையான கலைமகள் தொடங்கி இருபத்தைந்து ஆண்டுகள் ஆகிவிட்டன. அதன் வெள்ளி விழா வைபவம் மயிலை, ரசிக ரஞ்சனி சபா ஹாலில் வருஷப் பிறப்புக்கு மறுநாள் நடைபெறுகிறது. கனம் ஸ்ரீ பக்தவத்சலம் அவர்கள் தலைமை வகிக்க, கனம் ஸி. சுப்பிரமணியம் அவர்கள் பரிசுகள் வழங்க, சுதேச மித்திரன் ஆசிரியர் ஸ்ரீ ஸி. ஆர். ஸ்ரீநிவாஸன் விசேஷ வெளியீடு ஒன்றைத் துவக்கி வைக்கிறார். கலைமகள் பத்திரிகையைத் தொடங்கிய ஸ்ரீ ஆர். நாராயணசாமி ஐயர் அவர்கள் நினைவாக ஆண்டுதோறும் கலைமகள் ஆயிரம் ரூபாய் நாவல் போட்டி ஒன்று நடைபெற்று வருகிறது.

புது மந்திரிசபை

சென்னை ராஜ்யத்தில் புத்தாண்டு தினத்தன்று புதிய மந்திரி சபை ஏற்படுகிறது. சமீபத்தில் நடைபெற்ற பொதுத் தேர்தலுக்குப் பிறகு பழைய மந்திரிசபை ராஜீநாமா செய்து விட்டது. மீண்டும் ஸ்ரீ காமராஜ் அவர்களே பிரதம மந்திரியாகப் பதவியேற்று, மந்திரி சபை அமைக்கிறார். சென்னை, கோட்டையில் புது மந்திரிகள் ராஜ்ய கவர்னர் முன்னிலையில் பதவி ஏற்பார்கள்.

தபால் தலைகள் சேகரிப்போர் சங்கம்

தமிழ்நாடு தபால் தலைகள் சேகரிப்போர் சங்கம் என்று ஒரு பொழுதுபோக்குச் சங்கம் ஒன்றை மதுரையில் தொடங்கியிருக்கிறார்கள். இலங்கை, பர்மா, மலேயா போன்ற நாடுகளிலுள்ள நண்பர்களுடைய தொடர்பை இந்தச் சங்கம் வரவேற்கிறது. சங்கத்தின் முகவரி 34, கீழ மாசி வீதி, மதுரை என்பதாகும்.

இளம் எழுத்தாளர் சங்கம்

திருச்சியில் உள்ள பல இளம் எழுத்தாளர்கள் 'இளம் எழுத்தாளர் சங்கம்' ஒன்றை அமைக்க முயன்று வருகிறார்கள். இதுவரையில் 40 எழுத்தாளர்கள் அதில் சேர முன்வந்திருக்கிறார்கள். தமிழ்ப் பற்று உள்ள இளம் எழுத்தாளர்கள் அனைவரும் இதில் அங்கத்தினராக வரவேற்கப் படுகிறார்கள். பல இடங்களிலும் இந்தச் சங்கத்திற்குக் கிளைகள் அமைக்க இருக்கிறார்கள். எனவே பத்திரிகைகளுக்கு எழுதுபவர்களும் எழுதி இன்னும் வெற்றி காணாது இருப்பவர்களும் எழுத ஆர்வமுள்ளவர்களும் இந்தச் சங்கத்தில் சேரலாமாம். எனவே அதில் சேர விருப்பமுள்ளவர்கள் திரு எஸ். பி. அமலன் (மேரியண்ணா) மணி கண்டம் போஸ்டு, திருச்சி-3 என்ற முகவரிக்கு எழுதும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தமிழ் மறைக் கழகம்

தமிழ் மக்கள் அனைவரும் வைகாசி அனுஷத்தை வள்ளுவர் திரு நாளாகக் கொண்டாடி வருகிறார்கள். இந்த ஆண்டு அந்நாள் 11-6-57 செவ்வாய்க்கிழமை அன்று வருகிறது. அதனை மிகச் சிறப்பாகக் கொண்டாடுமாறு இரத்துமலானை (இலங்கை) தமிழ்மறைக் கழகத் தலைவர் கோருகிறார்.

கி. மு. 2500 முந்திய கற்சிலை

எகிப்து நாட்டில் புகழ் பெற்ற பிரமிடுகள் உள்ளன என்பதை நாம் அறிவோம். அந்த இடத்துக்குச் சமீபமாக உள்ள சூரியன் கோயிலினுள்ளே இப்பொழுது ஒரு கற்சிலை, தலைமட்டும் பழுதின்றிக் கண்டெடுக்கப்பட்டிருக்கிறதாம். இது கி. மு. 2500. ஆண்டுகளுக்கு முன் எகிப்து நாட்டை ஆண்ட 5-ஆவது வம்ச ராஜாவின் தலையென்று கருதுகிறார்கள். 'ரா' என்ற சூரியனைக் கடவுளாக முதலில் வழிபட்ட மன்னர் இவர் தானும்.

கண்ணன்

பொருளடக்கம்

மலர்: 8 இதழ்: 8

15 - 4 - '57

குழந்தைகளே!	பக்கம்	2
தபால் பெட்டி	..	3
கலைமகள்	..	5
துப்பறியும் மோகன்	..	6
யார் குற்றவாளி?	..	11
புதிதாக வந்தவர்		13
துப்பறியும் குப்பு	..	16
அவர் தந்த பரிசு	..	20
காந்தம்	..	26
அந்தச் சிலை	..	29
நீங்களும் நானும்	..	35
அவரைத் தெரியும்	..	38

அட்டைப் படம்: போட்டோ, புஷ்பத்துறை சுப்பிரமணியம்

செய்திகள் - 2-அட்டை

கிளைக்கழகம் - 3-அட்டை

வருஷ சந்தா (தீபாவளி மலர் உள்பட) ரூ. 4/-

கலைமகள், கண்ணன், மஞ்சரி மூன்றும் சேர்ந்த குடும்பச் சந்தா (மலர்கள் உள்பட) ரூ. 14/25

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

புதிய

சித்திரத் தொடர்கதை

கடற்புலி

ஆர்வி

எழுதியது

விரைவில்

ஆரம்பமாகிறது!

குழந்தைகளே!

உங்களுக்கெல்லாம் என்னுடைய புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன், இந்த ஆண்டிலே உங்களுக்குப் புகழும் வெற்றியுமாகக் கிடைக்கவேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

ஆம்; சமீபத்தில் உங்களுக்கு நடைபெற இருக்கும் பரீட்சையை மனத்தில் வைத்துக்கொண்டுதான் சொல்கிறேன். கேட்கும் கேள்வியை முதலில் புரிந்துகொண்டு தெளிவாக விடை எழுத முயலுங்கள். பரீட்சையைக் கண்டு பரபரப்புப் படாமல், நிதானமாகப் படித்ததையெல்லாம் ஒரு முறை புரட்டிப் பாருங்கள். படிக்காமல் போனவற்றைக் கவனமாகப் பார்த்து வைத்துக் கொள்ளுங்கள். அப்போது உங்களைக் கேள்வித்தாள் பயமுறுத்தாது. தெரிந்த விடைகளைத் தெளிவாக எழுதினால் நிச்சயம் வெற்றிதான். திறக்கும் பள்ளியில் உயர் வகுப்புக்கு நிச்சயம் போகலாம். நன்றாகப் படியுங்கள்; பயப்படாமல் விடை எழுதுங்கள். வெற்றி உங்களைத் தானே தேடி வரும்.

சென்ற இதழ் கண்ணன் வாங்கியவர்கள் இந்த இதழைப் பார்த்துவிட்டுத் திகைப்பார்கள். சென்ற இதழின் விலை 12 நயா பைசாவாக இருந்தது. இந்த இதழ் முதல் கண்ணன் பத்திரிகையின் விலையில் ஒரு சின்ன மாறுதல். அதாவது 13 நயா பைசாவாகச் செய்யப்பட்டிருக்கிறது. இந்த ஒரு பைசாவை நீங்கள் பெரிய மாறுதலாகப் பொருட்படுத்தக்கூடாது. இப்பொழுதுள்ள நிலைமையில் 12 நயா பைசா என்றால் ஆயிரக்கணக்கில் செலவு கூடிவிடுகிறது. ஒரு வருஷத்துக்கு உங்களுக்கு இதனால் 24 நயா பைசாதான் அதிகம். ஆனால் எங்களுக்கு இது ஆயிரக் கணக்கில் போகும் என்பதைச் சொல்லவா வேண்டும்? எனவே நீங்கள் இதைப் பெரிதாகப் பாராட்டாமல் எப்பொழுதும்போல் ஆதரவு காட்ட வேண்டும். இதுவே என் வேண்டுகோள். தனிப்பிரதி விலையில்தான் இந்த மாறுதலே தவிர ஆண்டுச் சந்தாவில் மாறுதல் இல்லை என்பதைக் கவனிக்க வேண்டுகிறேன்.

இந்தப் புத்தாண்டு இதழில் முதல் பரிசு பெற்ற மற்றொரு பரிசுத் தொடர்கதை ஆரம்பமாகியிருப்பதைக் காணலாம். தந்தை கோபித்துக் கொண்டதற்காக, வெளியில் இருந்த மோகன் எங்கோ போய்விடுகிறான். கதை போகப் போக நம் நெஞ்சை அள்ளுகிறது. படித்துப் பாருங்கள்.

அடுத்தபடியாக, 'கடற் புலி' என்ற சித்திரத் தொடர் கதை ஒன்றை ஆரம்பிக்கப்போகிறோம் என்பதை மகிழ்ச்சியோடு அறிவிக்க விரும்புகிறேன். இதை ஜூலை முதல் தொடங்கலாம் என்று முதலில் எண்ணினேன். ஆனால் கண்ணன் வாசகர்கள் அத்தனை நாட்கள் தள்ளிப் போடுவதை விடும்பவில்லை என்று தெரிவதால் விரைவிலேயே தொடங்குவதாக முடிவு செய்துவிட்டேன்.

புத்தாண்டுச் சமயத்தில் மற்றொரு மகிழ்ச்சிகரமான செய்தி. அதாவது கண்ணன் பத்திரிகையின் தாய் ஸ்தாபனமான கலைமகள் பத்திரிகை தொடங்கி இப்போது இருபத்தைந்து ஆண்டுகள் ஆகின்றன. அதன் வெள்ளி விழா வைபவம் 14-4-'57 ஞாயிற்றுக்கிழமையன்று மயிலாப்பூர், ரசிக ரஞ்சனி சபா ஹாலில் காலை எட்டரை மணிக்கு நடைபெறுகிறது. சென்னையில் உள்ள கண்ணன் வாசகர்கள் இதையே அழைப்பாகக் கொண்டு அந்த வைபவத்தில் வந்து கலந்துகொள்ளலாம். கலைமகள் அபிமானிகளாகிய பெற்றோருடன் கண்ணன் அபிமானியாகிய நீங்களும் வந்து கலந்துகொள்வது மகிழ்ச்சிக்குரிய விஷயம்தானே!

—ஆசிரியர்



இப்போது என்ன செய்வது?

முன்பு நான் ஒரு கதை எழுதினேன். யாருக்கு அனுப்பலாம் என்று கேட்டேன். 'படித்துவிட்டு நன்ருக இருந்தால் உன் விலாசத்துக்கே முதலில் தபாலில் போட்டுக்கொள்' என்றீர்கள். போட்டேன். மறுபடியும் படித்துப் பார்த்தேன். அது நன்ருகத்தான் இருக்கிறது. இப்பொழுது அதை உங்களுக்கு அனுப்பலாமா, சொல்லுங்கள்.

—வி. ராமசாமி, சேலம்.

(பொறு, அவசரப்படாதே, கதை எழுதுவது என்ருல் கிள்ளுக்கிரையா? இப்போது அதை உன் நண்பர்கள் சிலரிடம் கொடுத்துப் பார். அவர்கள் நன்ருக இருக்கிறது என்று சொல்கிருர்களா, பார். சொன்னுல் எனக்கு எழுது. அதற்குமேல் என்ன செய்யவேண்டும் என்று சொல்கிறேன். ஆ-ர்.)

எழுத்து விட்டுப் போனுல்......

1. போட்டோ எடுத்துக் கொ(ா)டுக்கப்படும்!
2. ஹோட்டல் மந்தி(ர) பவன்!
3. தெருவை (அ)சுத்தம் செய்யாதே!
4. பே(ா)ஸ்ட் ஆபீஸ்!
5. செய்தித் தி(ர)ட்டு!
6. சுத்தமான ப(ா)ல் கிடைக்கும்! —பி. வி. கிரி, சென்னை-3.

* * *

அழகு

எங்கள் தோட்டம் வந்துபார்!
என்ன என்ன அழகுபார்!
மாமரத்தி னழகு பார்!
மல்லிகைப்பூ வாசம் பார்!
நாவல் மரத்தி னழகு பார்!
நன்கு பழுத்த பழத்தைப் பார்!
அந்திமல்லிப் பூவைப் பார்.
ஆகா, அதன் மணத்தைப் பார்!
கொய்யா மரத்தில் குருவி பார்!
கொத்தித் தின்னும் குறும்பைப்பார்?
எங்கள் தோட்டம் வந்துபார்!
என்ன அழகு, அழகு பார்!

—கே. பழனிச்சாமி, கோயிலாம்பட்டி.

விலாசம் தேவை

அன்புடையீர், கா. ஸ்ரீ. ஸ்ரீ. என்பவரின் முழுப் பெயரைத் தெரிவிக்க வேண்டுகிறேன். —எஸ். பார்த்தசாரதி, திருக்கோவிலூர்.

—கே. கே. எஸ். முருகேசன். கவுந்தப்பாடி.

அவருடைய முழுப் பெயர் கா. ஸ்ரீ. ஸ்ரீநிவாஸாசாரியார். (ஆ. ர்.)

நீங்களும் நானும்

அன்புள்ள ஆசிரியர் அவர்களுக்கு

நீங்களும் நானும் என்ற பகுதியை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன். நாலு பக்கங்களுக்குக் குறையாமல் சிறு சிறு சித்திரங்கள் போட்டு விஸ்தரிக்கலாம். இந்தப் பகுதியை நான் மனமுவந்து வரவேற்கிறேன்? பாராட்டுகிறேன்; அதை விரும்புகிறேன். -கே. ஏ. நம்பி, நாகர்கோயில்.

* * * *

குறித்த நாள் தவறிடினும்...

ஆசிரியராம் என் அருமை அண்ணுவே, தங்கள் அன்புத் தம்பியருள் கடலூர் சிறுவணுகிய நானும் ஒருவன். உங்கள் எழிலாம் கண்ணன் இதழின் வாசகப் பிரியன். சிற்சில சமயங்களில் கண்ணன் குறித்த நாள் கடந்து வருகிறது. அந்தோ, ஏமாந்து திரும்புகிறேன். எனினும் அது குறித்த நாள் தவறி வந்திடினும் தொடர்கதைகளைப் படித்த பிறகு வந்த கோபமெல்லாம் போய், குதூகலம் கொள்ளுகிறது உள்ளம். ஆயினும் உள்ளத்தைத் தட்டி உணர்ச்சி ஊட்டும் கண்ணன் இனி குறித்த நாளில் குதித்துக்கொண்டு வருவானுக!

—இரா. இராதாகிருஷ்ணன், வன்னியர்பாளையம்.

* * * *

இனி இதுபோல்...

அன்புமிக்க அண்ணுவுக்கு வணக்கம்.

....திருச்சி அண்ணுவின் கதை சுவையுடன் இருந்தது. ஆனல் 1 - 4 - 57 இதழில் திரு தேவராஜன், ஜயராமன். சீனிவாசன் நண்பர்கள் எழுதிய 'தஞ்சாவூர் இட்லி' வேருெரு பத்திரிகையில் வெளிவந்தது. இப்படிக் கூட்டாகச் சேர்ந்து பெயர்த்து எழுதி அனுப்பியிருப்பது முறையானதல்ல. தாங்கள் சற்று எச்சரிக்கையாக இருங்கள்.

—ஜே. எஸ். கரீம், தர்மபுரி.

* * * *

நாணயத் தொழிற்சாலை

முதன் முதலில் கல்கத்தாவுக்குச் சமீபமுள்ள அலிப்பூரில்தான் நாணயத் தொழிற்சாலை ஏற்பட்டது. —நெடுமாறன், தஞ்சை.

* * * *

வேடிக்கைப் புதிர்

(1) 'அ'வும் 'க'வும் நண்பர்கள். இருவரும் சிந்தித்தார்கள். 'அ' என்பவன் 'க' வைப் பார்த்து, ''உன்னிடத்தில் குறைவான ஆடுகள் இருக்கின்றன. என்னிடம் உன்னிடமிருந்து ஒரு ஆடு வந்துவிட்டால் உன்னிடமிருப்பதைவிட எனக்கு இரு மடங்கு ஆகிவிடும்'' என்ருன். 'க' சொன்னுன்: ''என்னிடம் ஒன்றும் ரொம்பக் குறைவாக இல்லை. நீ ஒன்றே ஒன்று கொடுத்தால் நம் இருவருக்கும் சமமாகி விடுமே;!'' என்று. 'அ' 'க' இருவரிடமும் அப்படியானுல் எத்தனை ஆடுகள் இருந்தன?

—வேதா, சென்னை-7.

(2) ராமு, கோபு, கிட்டு மூவரிடமும் முறையே 50,30.10 மாம் பழங்கள் இருந்தன. ராமு என்ன விலைக்கு விற்ருனே அதே விலை விகிதப் படிதான் கோபுவும் கிட்டுவும் விற்றனர். கடைசியில் எல்லாரிடமும் காசு சரிசமமாக இருந்தது. ஒருவருக்கொருவர் பணம், பழம் இவைகளைப் பகிர்ந்து கொள்ளவும் இல்லை என்ருல் அவர்கள் என்ன விலைக்கு விற்றிருப்பார்கள்?

—எஸ். சுவாமிநாதன், சிதம்பரம்.

விடைகள்; 3-ஆவது அட்டையில்

கலைமகள்

ஆர். சரஸ்வதி

1. கல்வித் தெய்வம், கலைமகளாம்
கற்றோர்க் கவளருள், புரிபவளாம்
நல்லோர் நாவில், வாழ்பவளாம்
நான்முக(ன்) நெஞ்சில், வாழ்பவளாம்.

2. எவர்க்கும் கருணை செய்பவளாம்
எல்லாவற்றை(யு) மறிந்தவளாம்
சாவின் பின்னும் நிலைத்திடுமாம்
சான்றோர்க்கெல்லாம், அவளருளும்;

3. கன்னித் தமிழ்க் கவி கம்பனுமே
கலைமகளருளைப் பெற்றவராம்
இன்னும் பல பல புலவர்களுமே
இவளருளால் புகழ்பெற்றாராம்!

4. வாழ்க்கையிலவளருள் தேவையடா
வாழ்ந்திட அறிவும் வேண்டுமடா
தாழ்ந்தவராயினும் செல்வமதில்
தாரணிபுகழவர் பெறுவரடா.

5. கலைகள் கற்றிடவேண்டுமெனில்
கலைமகளருளே வேண்டுமடா
நிலையற்றதுவாம் செல்வமடா
நிலையாய் நின்றிடும் கல்வியடா

6. அவளருள் பெற்றோர் யாவரும் நம்
அனைவரின் நெஞ்சிலும் நிற்பரடா
அவளருள் பெறவே அவளடி நாம்
அநுதினம் போற்றிடவேண்டுமடா.

துப்பறியும் மோகன்

1

கோபத்தின் விளைவு

வாயிற் கதவை யாரோ மெல்லத் தட்டும் சத்தம் கேட்டது.

மோகனின் அம்மா எழுந்து போய்க் கதவைத் திறந்தாள். வெளியே மோகன் நின்றுகொண்டிருந்தான். அவன் முகத்தில் பயமும் கலவரமும் சூழ்ந்திருந்தன. தலை மயிர் கலைந்து கிடந்தது. விம்மி விம்மி அழுதவனைப் போல் அவன் முகம் சிவந்து வீங்கிக் கிடந்தது.

வீட்டுக்குள் நுழையாமல் வெளியிலிருந்தபடியே மோகன் ரகசியக் குரலில், ''அப்பா வந்துட்டாரா, அம்மா?'' என்று கேட்டான்.

அவனுடைய நிலையைக் கவனித்தும் கவனியாதவள் போல இருந்த அவன் அம்மா, ''இன்னும் வரவில்லை. நீ உள்ளே வா'' என்று பதிலளித்தாள்.

ஒரு பெருமூச்சு விட்டபடி உள்ளே நுழைந்தான் மோகன். ''அம்மா..'' என்று அழைத்தான். சொல்ல வந்ததைச் சொல்லி முடிக்கத் தெரியாமல் அவன் தயங்கினான் என்பது நன்றாகப் புரிந்தது.

''என்னடா, சொல்லேன்! என்ன விஷயம்?''

''அம்மா...வந்து... வந்து...நான் பெயில் ஆயிட்டேம்மா..'' என்று திக்கித் திணறிக் கூறிய மோகன் தலையைக் குனிந்து கொண்டான். தன் தாயைக் கண்ணெடுத்துப் பார்க்கவே துணிச்சல் இல்லை அவனுக்கு.

தான் சொன்னதைக் கேட்டதும் அம்மா திகைத்து நின்று விடப் போகிறாள்; அதைத் தொடர்ந்து ஒரு ரகளையே நடக்கும் என்று எதிர் பார்த்த மோகன் ஏமாற்றமே அடைந்தான். அவன் தாயார் முகத்திலோ குரலிலோ எவ்வித சோகக் குறியையும் காணோம்.

''உம்..நாம் நினைக்கிறபடி எல்லாம் நடந்து விடுகிறதா? கடவுள் சித்தம் இப்படி இருக்கும் போது நாம் செய்வதற்கு என்ன இருக்கிறது?....சரி, நீ அழாமல் உள்ளே வந்து சாப்பிடு'' என்று தேற்றினாள்.

மோகனுக்கு அந்த நிலையிலும் தன் தாயை அப்படியே கட்டியணைத்துக் கொள்ள வேண்டும் போலிருந்தது. அவளது

தே. பார்த்தசாரதி

தாயன்பை எண்ணிய போது வேதனையால் வாடியிருந்த அவன் நெஞ்சிலும் மகிழ்ச்சி பரவியது.

''சட்டையையெல்லாம் கழற்றி அப்புறம் வைத்துக் கொள்ளலாம். முதலில் கைகால்களை அலம்பிக் கொண்டு வா. தட்டு போட்டிருக்கிறேன்'' என்ருள் அம்மா.

''வேண்டாம் அம்மா; எனக்குப் பசிக்கவில்லை..'' என்று விம்மினன் மோகன்.

''சே, அசடு! பேசாமல் சொல்றபடி செய். சாப்பிட உட்கார்'' என்று கடிந்து கொண்டாள் அவள்.

மோகன் புழக்கடைக்குச் சென்று கை கால்களையும் முகத்தையும் அலம்பிக் கொண்டான். அவன் முகத்தில் 'ஜில்'லென்ற குளிர்ந்த தண்ணீர் பட்டதும். வாடியிருந்த அவன் மனத்திலும் கொஞ்சம் தெம்பு உண்டாயிற்று.

கால் சட்டைப்பை நனைந்தது. அதைத் தொட்டுப் பார்த்துக் கொண்டான். உள்ளே பர்ஸ் இருந்தது. அதில் கொஞ்சம் ரூபாயும் இருந்தது. அது அவனுடைய சொந்தச் சம்பாத்தியம். அவ்வப்போது சிறு பத்திரிகைகளுக்குக் கதைகள் எழுதி அவன் சேர்த்த பணம் அது.

அவன் மனத்தில் பலவித சிந்தனைகள் சுற்றிப் பறந்தன. அவன் சாதாரணமாக வகுப்பில் புத்திசாலிதான். எந்த ஆசிரியரும் அவனை 'மக்கு' என்று ஒதுக்கித் தள்ளியதில்லை. இதுவரையில் ஒரு வகுப்பிலும் தவருமல் மேல் வகுப்புக்கு வந்துகொண்டேயிருந்தான். ஆனல், அவனுடைய துரதிருஷ்டம் இப்போது எஸ். எஸ். எல். ஸி. அரசாங்கப் பரீட்சையில் தோல்வியுற்று நின்ருன்.

மூன்ரும் வகுப்பில் படிக்கும் ஒரு சிறு பையனுக்குப் பள்ளிக்கூடச் சம்பளம் கட்ட அவன் அப்பா பணம் கொடுக்கிருர் என்று வைத்துக் கொள்ளுங்கள். ஆனல், நடுவழியில் அவன் அஜாக்கிரதையினல் சம்பளப் பணம் தொலைந்து விடுகிறது. அப்போது அவன் மனத்தில் என்னென்ன எண்ணங்கள் ஓடும்?

'முதலில் இந்த வீட்டை விட்டே ஓடிவிடலாமா?' என்று அந்தப் பிஞ்சு நெஞ்சில் உதிக்கும். 'ஓடுவதானல் எங்கே ஓடுவது?' என்று மனம் குழம்பும்போதுதான், தனக்கு வேறு எங்கும் போக்கிடம் கிடையாது, வீட்டுக்குப் போவதைத் தவிர வேறு வழி கிடையாது என்று தெரியும். இந்த எண்ணம் ஏற்பட்டதும் மனத்தில் ஒருவித துணிச்சல் ஏற்படும். பெற்ருேரைக் கண்டதும் பயம் காரணமாகவோ அல்லது தப்பித்துக் கொள்ள வேணும் என்ற எண்ணத்திலோ உரக்க அழுகை வந்துவிடும். உடனே அப்பா, 'சம்பளத்தைத் தொலைத்துவிட்டாயா?.. போனல் போகிறது போ. நான் வேறு சம்பளம் தருகிறேன். நீ உள்ளே போய்க் காபி சாப்பிடு' என்பார். உள்ளே போய்க் காபியைக் குடித்துவிட்டு, அப்புறம் அழுகையை நிறுத்துவது..' என்று அந்த இளம் உள்ளத்தில் தோன்றும். இதே நிலையில்தான் மோகனும் இருந்தான்.

தட்டின் முன் உட்கார்ந்த மோகனின் மனத்தில் இந்தச் சிந்தனைகள் ஓடின. அவன் அம்மா இலையில் சாதத்தைப் போட்டு நெய்யையும் ஊற்றியதும்—

''ஏண்டி, வெற்றிலைக்குத் தடவ சுண்ணும்பு எங்கே வச்சிருக்கே?'' என்று கேட்டபடியே மாடிப் படிகளில் இறங்கி வந்தார் கோபாலசாமி. அவர்தான் மோகனின் அப்பா,

மோகனின் நெஞ்சு 'துணுக்'கென்றது. தன் அம்மாவை நிமிர்ந்து பார்த்தான். அந்தப் பார்வையில் 'அப்பா வீட்டில் இல்லை என்று சொன்னுயே அம்மா?' என்ற கேள்வி நின்றது. அதைப் புரிந்துகொண்ட அவன் அம்மா, ''நீ பேசாமல் சாப்பிடுடா!'' என்ருள்.

அப்போது அந்த அறைக்குள்ளேயே வந்துவிட்டார் அவன் அப்பா. மோகன் சாப்பிடுவதைப் பார்த்தபடியே ஒரு நிமிஷம் நின்ற அவர், ''ஓகோ, துரைக்குச் சாப்பாடு வேறு?'' என்று ஏளனக் குரலில் கேட்டுவிட்டுத் தம் மனைவியை நோக்கி, ''ஏண்டி சனியனே. அவன் வந்ததும் மாடிக்கு அனுப்பு என்று

சொன்னேனே? அதைச் செய்யாமல் ஏன் அவனுக்குச் சாப்பாடு போட்டாய்?'' என்று இரைந்தார்.

ஒரு பெரிய பிரளயம் நடக்கவிருக்கிறது என்று அவன் மனம் அச்சுறுத்தியது. மோகனின் அம்மா நிதானமாக, ''நீங்கள் மாடிக்குப் போங்கள். அவனை அனுப்புகிறேன்'' என்றாள். அவனை ஒரு முறை முறைத்துவிட்டு மாடிக்குப் போகாமல், கூடத்து நாற்காலியில் போய் உட்கார்ந்த அவன் அப்பா அவனைத் தயாராக எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். 'உதை என்னவோ கொடுக்கப் போகிறோம். சாப்பிட்டுவிட்டு வந்தால்தானே அதை வாங்கிக்கொள்ளச் சக்தி இருக்கும்?' என்ற எண்ணம் அவருக்கு ஏற்பட்டது போலும்!

மோகனுக்குச் சாதம் தொண்டைக்குள் இறங்கவேயில்லை. கைகள் நடுங்கிக்கொண் டிருந்தன. அவன் அம்மா எவ்வளவோ சமாதானம் சொல்லியும் கேட்காமல் பாதிச் சாதத்தை இலையிலே அப்படியே வைத்துவிட்டு 'விறுவிறு' வென்று எழுந்து சென்று கைகால்களை அலம்பிக்கொண்டு கூடத்துக்கு வந்தான். பின்னாலேயே அவன் அம்மாவும் வந்தாள்.

ரகளை ஆரம்பமாகியது.

''ஏண்டா கழுதை உனக்குக் கட்டுக்கட்டா பணத்தைச் செலவழித்தேனே; நன்றாகப் படித்துப் பாஸ் செய்ய என்ன கேடுடா?'' என்று கர்ஜனைக் குரலில் கேட்டார் அவர்.

பலியிடத் தயாராக நிற்கும் ஆட்டைப் போல நடுங்கிக்கொண்டு அவர் முன் நின்றுகொண் டிருந்தான் மோகன்.

''வாயிலே என்னடா கொழுக்கட்டையா? வாயைத் திறந்து பதில் சொல்லேண்டா..நன்றாகப் படிப்பதற்கு என்ன?''—கர்ஜனை.

''...நான் நன்னாத்தான் அப்பா படிச்சேன்....ஆனா....'' என்று இழுத்தான் மோகன். தான் என்ன சொல்கிறோம் என்றே தெரியாத நிலையில் இருந்தான் அவன்.

''..கழுதை, ஏண்டா புளுகறே? நன்னாப் படிச்சா அப்படித்தான் பெயிலாகுமோ......?'' என்று இரைந்தார் கோபாலசாமி.

மோகனின் அம்மா குறுக்கிட்டு, ''பரீட்சை என்றால் தங்கத்தை நிறுப்பது போலவா மார்க்குப் போடுவார்கள்......?'' என்று கூறினாள்.

கோபாலசாமியின் கோபம் அவள் மீது திரும்பியது. ''நீ வாயை மூடிண்டு கொஞ்ச நாழி வெறுமனே இரு'' என்று கத்திவிட்டு, ''கதை எழுதிக்கொண்டும் கதைப் புத்தகம் படித்துக்கொண்டும் சினிமாவுக்குப் போய்க் காலத்தைக் கழித்துக்கொண்டும் இருந்தால் எப்படிடா பாஸ் ஆகும்?'' என்று கேட்டு மோகனின் கன்னத்தில் ஓர் அறை விட்டார்.

'கிடுகிடு' வென்று நடுங்கியது மோகனின் உடம்பு. அவன் தலையில் ஓங்கி ஒரு குட்டுக் குட்டிவிட்டு, ''நீ இப்படிப் பெயிலானா தண்டத்துக்கு யாருடா பணம் அழறது?'' என்றார் அவர்.

அவர் இத்துடன் தணியவில்லை. விசிறிக் காம்பைத் திருப்பிப் பிடித்து, மோகனின் கையிலும் காலிலும் மாற்றி மாற்றி விளாசு விளாசு என்று விளாசினார். மோகனின் அம்மாவால் தாங்க முடியவில்லை. ''ஐயோ, அவனை அடிக்காதீர்கள். வேண்டுமானால் என்னை அடியுங்கள்'' என்று கதறிக்கொண்டே மோகனின் முன்னால் போய் நின்றாள் அவள்.

அவருக்கிருந்த வெறியில் அந்த அம்மாளையும் பிடித்துத் தள்ளினார் கோபாலசாமி.

ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு அல்லவா? அதை அவர் நன்கு நிரூபித்து விட்டார். ''ஐயோ, அப்பா! அம்மா!'' என்று அவன் அலறினான். ''அழுகை என்னடா அழுகை? நீ பெயிலானதற்காக உன்னை வைத்துக் கொஞ்சுவார்களா?. போடா வெளியே! இனிமேல் நீ இந்த வீட்டுக்குள் நுழைய வேண்டாம். ஓடிவிடு. ஓடு; எங்கேயாவது தொலைந்து போ. என் கண்ணெதிரே நிற்காதே....வெளியே போ, இனி இந்த வீட்டுக்குள் நுழைந்தாயோ, உன் காலை ஒடித்து விடுவேன்'' என்று இரைந்து

பியானோ வாசிக்கப்போறேன்!

தன் வாழ்வில் நடந்த நிகழ்ச்சியொன்று அவர் மனத்தில் திரைப்படம் போல் தோன்றியது.

அவர் பள்ளியில் படித்துக்கொண்டிருந்த போது, ஐந்தாம் படிவத்தில் தவறிவிட்டார். நல்ல கெட்டிக்காரர்தான். வீட்டில் தன்னை உதை உதையென்று உதைக்கப் போகிறார்கள் என்று அவர் எதிர்பார்த்து நடுங்கிக்கொண்டிருந்த போது அவர் அப்பா அங்கே வந்தார். ''ஏண்டா முட்டாள், இதற்குப் போய் இப்படி விழுந்தவன் மாதிரி நிக்கறயே?......போ போ, அடுத்த தடவை பார்த்துப் படி..'' என்றார். கோபாலசாமியின் உள்ளம் அப்படியே குளிர்ந்து விட்டது. அந்த உற்சாகத்தில் அடுத்த தடவை மிகவும் கஷ்டப்பட்டுப் படித்து வகுப்பிலேயே முதல்வராகத் தேறினார். இந்தச் சம்பவம் நினைவுக்கு வந்ததும் அவர் கண்கள் பனித்தன.

தம் மிருக குணத்திற்காகத் தம்மையே நொந்துகொண்டார். விடுவிடுவென்று கீழே இறங்கி வந்தார். நேரமோ வெகு விரைவாக ஓடிக்கொண்டிருந்தது.

கீழே கூடத்தில் மோகனின் அம்மா படுத்துக்கொண்டிருந்தாள். கோபாலசாமியைக் கண்டதும் எழுந்து நின்றாள். அவள் நிலையைப் பார்க்கப் பார்க்க அவருக்குப் பரிதாபமாக இருந்தது. ஒன்றும் பேசாமல் வாயிற் கதவைத் திறந்து எட்டிப் பார்த்தார். அவருக்குத் 'துணுக்' கென்றது. திண்ணை காலி! மோகனைத் திண்ணையில் காணோம்!

அவர் கூடவே வந்த மோகனின் அம்மா, கோபாலசாமியின் முகத்தில் படிந்திருந்த கிலியைக் கண்டு திடுக்கிட்டாள். (தொடரும்)

கொண்டே அவன் கழுத்தைப் பிடித்துத் தள்ளினார். வாயிற் கதவு திறந்திருந்ததால் 'குபுக்' கென்று வெளியே வந்து விழுந்தான் மோகன். 'படா' ரென்று வாயிற் கதவைச் சாத்தித் தாளிட்டார். பிறகு ஏதோ பெரிய காரியம் ஒன்றைச் சாதித்து விட்டவர்போல் 'விடுவிடு' வென்று மாடிக்குச் சென்றுவிட்டார்.

அவன் அம்மா தரையில் படுத்தபடியே விசும்பி விசும்பி அழுதாள். குமுறிக் குமுறி அழுதாள். துக்கத்தில் அவள் நெஞ்சு வெடித்துவிடும் போலிருந்தது.

மாடியில் போய் உட்கார்ந்து விட்ட கோபாலசாமியின் கோபமும் வெறியும் மறைந்து, விவேகம் தலை காட்டியது.

குற்றவாளி யார்?

'மாயவன்'

கண கணவென்று ஒலித்தது டெலிபோன் மணி. வேலையிலே கவனமாக இருந்த ராஜா உடனே ரிஸீவரை எடுத்தார். மறுபக்கத்தில் இன்ஸ்பெக்டர் இருதயசாமியின் குரல் கேட்டது.

''ஸார், கொஞ்சம் உடனே வர்றீங்களா? கொலைக் கேஸ் ஒன்று!''

''எனக்கு வேலை மூச்சுவிடக் கூட முடியவில்லை.. நீங்களே..''

''இல்லை சார், கேஸ் ரொம்ப 'ஸிம்பிள்' தான். ஆனால் புரியவில்லை..''

''ஓ!''

''கொலை நடந்த இடம் மாருதி ஸ்டுடியோ, பிரபல பின்னணிப் பாடகி, ஸவுண்ட் ரிகார்டிங் ரூமில் கொலை செய்யப்பட்டிருக்கிறாள். வேறு ஒருவருமே இல்லை..''

''முதன் முதல் இதை அறிவித்தது யார்..!''

''ஒரு பிடில்காரர்..''

''இப்பொழுது என்ன செய்திருக்கிறீர்கள்?''

''வெளியிலிருந்தோ, உள்ளிருந்தோ ஒருவரும் போகாதபடி பந்தோபஸ்து செய்திருக்கிறேன்.''

''சரி, இதோ வருகிறேன்..''

துப்பறியும் ராஜாவின் கார் மாருதி ஸ்டுடியோவில் நுழைந்தது. இன்பெக்டரும் ஸ்டுடியோ நிர்வாகிகளும் அவரை வரவேற்றனர்.

''இந்தக் கேஸ் ரொம்ப மர்மமாக இருக்கிறது; விசித்திரமாகவும் இருக்கிறது. நல்ல வேளை; நீங்கள் வந்தீர்களே..'' என்று வரவேற்றார் இன்ஸ்பெக்டர்.

''கொலை நடந்த இடம் 'ரிகார்டிங் ரூம்!.. இல்லையா? இதைப் பார்த்தவர் பிடில்காரரா..?''

''அவரும் பார்க்கவில்லையாம். சத்தம் கேட்டு ஓடிப்போய்ப் பார்த்தாராம்.. பாடகி கொலை செய்யப்பட்டிருந்தாளாம்.''

''உள்ளேயோ, வெளியிலோ வேறு யார் யார் இருந்தார்கள்?''

''ஒருவருமே இல்லை..''

''ஓகோ, அந்த பிடில்காரர் எங்கே?''

''இங்கேயே இருக்கிறார். நாம் போய், கொலை நடந்த இடத்தைப் பார்ப்போமா?''

''ஒன்றும் வேண்டாம். இங்கிருந்தபடியே விசாரணையைத் துவக்குகிறேன்..''

''இடத்தைப் பார்க்காமல் எப்படித் துப்புக் கண்டு பிடிப்பது?''

''துப்புக் கண்டுபிடித்துவிட்டேனே! இங்கேயே உட்கார்ந்து உமக்குத் திருப்திகரமாகக் கொலைகாரனை உம் கையில் ஒப்புவித்துவிட்டுப் போகிறேன். போதுமா!''

ஆச்சரியப்பட்டார் இன்ஸ்பெக்டர். உடனே ஒரு போலீஸ்வீரனை அனுப்பி, பிடில்காரரை அழைத்து வரச் செய்தார். தன்னைக் குழப்பிக் கொண்டிருக்கும் அந்த மர்மக் கொலையை, வெகு சுலபமாக இங்கேயே உட்கார்ந்து கொலைகாரனைப் பிடித்துத் தருவதாகக் கூறுகிறாரே, இந்த ராஜா; இது எப்படி என்று புரியாமல் தவித்தார் இன்ஸ்பெக்டர். விசாரணையை ஆவலுடன் கவனித்தார் அவர். பக்கத்திலேயே ஸ்டுடியோ நிர்வாகிகளும் இருந்தனர். விசாரணையைத் துவக்கினார் ராஜா.

''கொலையுண்ட அந்தப் பாடகியைத் தெரியுமா உமக்கு?''

''தெரியும்?''

''சமீப காலமாகவா, வெகு நாட்களாகவா?''

''பல வருடங்களாகத் தெரியும்.''

''கொலையுண்ட இடம் எது?''

''ரிகார்டிங் ரூம்.''

''உள்ளே இன்னும் யார் யார் இருந்தார்கள்?''

''சப்தம் கேட்டு நான் உள்ளே போனபோது அங்கே வேறு எவரையுமே காணவில்லை.''

''இன்று ஏதாவது ரிகார்டிங் உண்டா?''

''ரிகார்டிங் இல்லை; ரிஹர்ஸல் உண்டு.''

ராஜா தொடர்ந்தார்.

''அங்கிருந்து சுமார் நூறு கஜம் இருக்கும்..''

''என்ன சப்தம் கேட்டது?''

''அலறல் சப்தம் கேட்டது..''

''நீர் என்ன செய்தீர்?''

''உடனே என்னமோ ஏதோ என்று ஓடினேன். பார்த்தால்... கொலை..ரத்த வெள்ளம்..''

''ஓகோ..சரி, இன்ஸ்பெக்டர்! இந்தப் பிடில்காரரைக் கைது செய்யும். இவர்தான் கொலைகாரர்..''

''ஐயையோ, நானா? இல்லை; இது என்ன?'' என்று உளறினார் பிடில்காரர். மற்றவர்கள் குழம்பி நின்றார்கள்.



''கொலை நடப்பதற்குச் சற்றுமுன்னால் நீர் எங்கிருந்தீர்?''

''ரிகார்டிங் அறையில்..''

''இன்னும் யார் இருந்தார்கள்?''

''நாங்கள் இருவருமே இருந்தோம், வேறு ஒருவரையும் காணாமல் போகவே, நான் போய்ப் பார்த்து வருவதாகச் சொல்லி வெளியே வந்தேன்..''

''அந்த ரிகார்டிங் அறையின் கதவைத் திறந்துகொண்டு வெளியே போனால் பிறகு கதவு தன்னால் மூடிக்கொள்ளும் இல்லையா?''

''ஆமாம்.''

''உமக்குச் சப்தம் கேட்கும்பொழுது நீர் எங்கு இருந்தீர்?''

''ஸ்டுடியோ மானேஜர் ஸார், கொஞ்சம் என் கேள்விக்குப் பதில் சொல்லுங்கள்! ரிகார்டிங் அறை பிரத்தியேக அமைப்பல்லவா? உள்ளிருந்து சப்தம் வெளியிலோ, வெளிச் சப்தம் உள்ளேயோ கேட்குமா?

''கேட்காது.''

''அப்படியிருக்கும்பொழுது, பாடகியின் அலறல் சப்தம் இவருக்கு எப்படிக் கேட்டிருக்க முடியும்?''

மறு பேச்சின்றி பிடில்காரரின் கைகளில் விலங்கை மாட்டினார் இன்ஸ்பெக்டர். பிடில்காரரின் தலை தொங்கியது.

புதிதாக வந்தவர்

வி. ராஜாமணி

ரமணி, ''அப்பா! அப்பா!'' என்று கத்திக்கொண்டே உள்ளே ஓடி வந்தான்.

கையிலே வைத்துக்கொண்டிருந்த தினசரித் தாளைத் தூக்கி எறிந்துவிட்டுக் குரல் வந்த பக்கம் திரும்பினார் பரமசிவம்.

''என்னடா! என்ன சமாசாரம்! என்ன வேண்டும் உனக்கு? என்னமோ பறிகொடுத்தது போல ஓடி வருகிறாயே!'' என்றார் பரமசிவம்.

அவன் தலைதெறிக்கப் பரபரவென்று ஓடிவருவது அவருக்கு என்னவோ மாதிரிப் பட்டது போலும்.

''நம்ப பக்கத்து வீட்டுக்காக யாரோ வந்திருக்கிறார்கள், உன்னைத் தேடிக்கொண்டு. 'பரமசிவம் பிள்ளை வீடு இதுதானா?' என்று என்னைக் கேட்டார் ஒருவர். நான் இதுதான் என்று பதிலளித்தேன். 'அவரை அவசரமாகப் பார்க்கவேண்டும்' என்று அவர் கூறவே நான் ஓடிவந்தேன்'' என்று முடித்துப் பெருமூச்சாக விட்டான் ரமணி. பாவம், ஓடிவந்ததன் களைப்பு அவனுக்கல்லவா தெரியும்!

''நம் பக்கத்து வீட்டுக்கா குடி வரப்போகிறார்கள்? என்ன! என்ன ஆச்சரியம்! பாவம்! ஊருக்குப் புதிது போலிருக்கிறது. சரி! நான் போய்ப் பார்க்கிறேன்!'' என்று கூறிக்கொண்டே வெளியில் வந்தார் பரமசிவம்.

பக்கத்து வீடும் அவருக்குச் சொந்தமானதுதான். ஆனாலும் கடந்த நான்கைந்து மாதங்களாகப் பூட்டியே கிடந்தது. ஒருவரும் குடி வரவில்லை. காரணம் அங்கே முன்பு குடியிருந்தவர்களில் ஒருவன் தூக்குப் போட்டுக்கொண்டு தன் முடிவைத் தானே தேடிக்கொண்டு விட்டானாம். பிசாசு உருவில் மாறி இரவில் அங்கே வசிப்பவர்களை எல்லாம் பயமுறுத்துகிறதாம்... இந்த வதந்தி அந்த ஊராருக்குப் பரவவே, குடிவர யாரும் முன்வரவில்லை.

பரமசிவம் பிள்ளைக்குத் தம் வீடு இப்படிப் பாழாய்ப் போவது கண்டு மிக வருத்தம்தான். ஆனாலும் என்ன செய்வது? யாரும் குடிவர மாட்டேன் என்கிறார்களே! அறுபது ரூபாய் வாங்கக்கூடிய அந்த வீட்டுக்கு இருபது ரூபாய் வாடகை

வந்தால் கூடப் போதும் என்று அவர் அடிக்கடி கூறிக்கொண்டிருந்தார். சும்மா விட்டாலும் வராத அந்த வீட்டுக்கு இப்போது யாரோ குடி வரப்போகிறார்கள் என்றவுடன் அவருக்கு ஆச்சரியமாக இருக்காதா?

வாசலில் தமக்காகக் காத்துக் கொண்டிருப்பவரைக் காண விரைந்தார் பரமசிவம்பிள்ளை. அங்கே ஒரு கனவான் நின்றுகொண்டிருந்தார். நெற்றியிலே இருந்த அகலமான குங்குமம் அவர் பழங்காலத்து மனிதர் என்று எடுத்து காட்டியது. தலையிலே குடுமி. வெள்ளெழுத்துக் கண்ணாடி. பருத்த உருவம், இவை எல்லாம் அவர் அடையாளங்கள்.

''வாருங்கள்'' என்று கூறிக்கொண்டே அவரை உள்ளே அழைத்தார் பரமசிவம் பிள்ளை.

''ஸார், பேப்பரை வேணுமானால் நீங்களே எடுத்துக்குங்க; என் மூக்குக் கண்ணாடியை மட்டும் சீக்கிரம் கொடுத்துடுங்க. ஏன்னா அடுத்த ஸ்டேஷன்லே நான் இறங்கணும்!''

—பி. எஸ். பாலசுப்பிரமணியன், புரசைவாக்கம்.

''நான் உங்கள் பக்கத்து வீட்டுக்குக் குடிவர விரும்புகிறேன். அதைக் கொஞ்சம் திறந்து காட்டுகிறீர்களா?'' என்று கேட்டார் அந்தக் கனவான், அமைதியான குரலில்.

ஒரு கணம் அந்த மனிதரையே உற்று நோக்கினார் பரமசிவம் பிள்ளை. அவருடைய பார்வை, 'என்ன இந்த மனிதர் நம் வீட்டில் இருப்பாரா? அல்லது பேய் இருக்கிறது என்று தெரிந்தவுடனே ஓடிவிடுவாரா?' என்று கேட்பது போல இருந்தது.

''அதற்கென்ன! வாருங்கள், காட்டுகிறேன்'' என்று கூறிக்கொண்டே அவரை அழைத்துச் சென்று பக்கத்து வீட்டைத் திறந்து காண்பித்தார்.

அந்தப் புதிய மனிதர் வீட்டின் உள்ளே நுழைந்து எல்லா அறைகளையும் கண்ணோட்டம் விட்டார். ஆபீஸ் அறை, சமையலறை, பாத் ரூம் எல்லாம் அவருக்குப் பிடித்திருக்கின்றன என்பதை அவர் முகம் எடுத்துக் காட்டியது.

''இதற்கு வாடகை என்ன வேண்டும்?'' என்றார் வந்தவர்.

'விஷயத்தைச் சொல்வதா, வேண்டாமா!' என்று தயங்கினார் பரமசிவம் பிள்ளை, எப்படியாவது அவரை அந்த வீட்டில் குடியிருக்கச் செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன். ''வாடகை அப்படி ஒன்றும் அதிகம் இல்லை. மாதம் இருபது ரூபாய்தான்'' என்றார் தணிந்த குரலில். எங்கே வீடு பிடிக்கவில்லை என்று சொல்லிவிடுவாரோ என்று உள்ளூறத் தயக்கம்தான்.

'வாடகை இருபது ரூபாய்' என்றவுடன் வந்த மனிதருக்கு மிகவும் வியப்பாக இருந்தது போலும்! இவ்வளவு பெரிய வீட்டின் வாடகை மாதம் இருபது ரூபாய்தானா! ஆச்சரியமாக இருந்தது அவருக்கு.

இருந்தாலும் வெளிக்காட்டாமலே, ''அப்புறம் நடுவில் வாடகையை உயர்த்த மாட்டீர்களே?'' என்றார்.

''மாட்டேன்.''

''எவ்வளவு நாள் ஆனாலும்?''

"எவ்வளவு நாள் ஆனாலும் சரி. கவலை வேண்டாம்."

"ரொம்ப சரி! சந்தோஷம்! நான் நாளை வந்துவிடுகிறேன்! அதற்குள் இதை முன்பணமாகப் பிடியுங்கள்" என்று கூறிக்கொண்டே இரண்டு பத்துரூபாய் நோட்டுகளை அவர் முன் நீட்டினார்.

பரபரப்பு அடைந்த பரமசிவம் பிள்ளை பணத்தைப் பெற்றுக் கொண்டே உள்ளே போகத் திரும்பினார்.

"ஒரு நிமிஷம்" என்ற அந்தப் புதிய மனிதரின் குரலைக் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினார் பரமசிவம், எங்கே கைக்கு எட்டியது, வாய்க்கு எட்டாமல் போய்விடுமோ என்று.

"அதெல்லாம். .அதுதான். .உங்கள் வீட்டின் முன்பு போர்டு ஒன்று அடிக்க வேண்டும். .மாட்டலாம் அல்லவா?" என்று தயங்கிக் கொண்டே கேட்டார் புதிய மனிதர்.

"ஓ இதுதானே.... அதற்கு என்ன! இனி இந்த வீடே உங்களுடையதுதானே!" என்று கூறிக் கொண்டே விரைந்தார் பரமசிவம் பிள்ளை. அவரது மனம் சந்தோஷம் அடைந்திருந்தது. வீட்டினுள்ளே நுழைந்த அவருக்குப் பெருமை தலைகால் புரியவில்லை.

"என்ன! உன்னைத்தானே!" என்று தம் மனைவியை அழைத்தார் அவர்.

"என்னவாம்!" என்று கூறிக் கொண்டே அவர் முன் தோன்றினாள் அவர் மனைவி.

விஷயத்தைக் கேட்ட அவள் தன் கணவனை நோக்கி, "அவர் எங்கே வேலை செய்கிறார்! அதைக் கேட்டீர்களா? பாவம்! அவருக்கு அந்த வீட்டுச் சமாசாரம் தெரியாதுபோல் இருக்கிறது!" என்றாள் ஆதங்கத்துடன்.

"அடாடா! அதைக் கேட்க மறந்துவிட்டேனே! இரு; நாளை பார்த்தால் தானே தெரிகிறது" என்று தமக்குத் தாமே சமாதானம் கூறிக்கொண்டார்.

மறுநாள்—

தம் பக்கத்து வீட்டுக்காரரைக் கண்டு அவர் வேலையைப்பற்றி விசாரிக்க எண்ணிய பரமசிவம் பிள்ளை வாசலுக்கு வந்தார். பக்கத்து வீட்டு வாசல் முன் மாட்டப்பட்டிருந்த பலகை அவரைத் திகைப்புக்குள்ளாக்கியது. அதில் கீழ்க்கண்டவாறு எழுதியிருந்தது:

"இவ்விடத்திலேயே எல்லாவித பேய், பிசாசுகளையும் மந்திரத்தால் விரட்டியடிக்கப்படும். மலையாள பகவதியின் துணைபெற்ற ஆலோசகர் இங்கே இருக்கிறார்."

துப்பறியும் குப்பு!

ரா. தங்கவேலன்

குப்புவின் வீடு பெரிய மாடி வீடு. அந்த மாடி வீட்டின் முகப்பில் மிகப் பெரிய திண்ணை. குப்புவின் நண்பர்கள் அந்தத் திண்ணையைப் 'பாரதி சிறுவர் சங்கம்' என்று அழைப்பது வழக்கம். திண்ணையைச் சுற்றிலும் தட்டிகளை அடைத்து அதை ஒரு தனியறை போல் ஆக்கியிருந்தான் குப்பு.

அந்தப் பாரதி சிறுவர் சங்கத்தில் அன்று புதிதாக ஒரு வாழைமரம் கட்டப்பட் டிருந்தது. ஆறு சிறு-வர்கள் சங்கத்தின் உள்ளே உட்கார்ந்திருந்தார்கள். மேஜையில் அழகான துண்டு விரிக்கப்பட்டிருந்தது. கோபால் தலைவருடைய இடத்தில் கம்பீரமாக உட்கார்ந்திருந்தான்.

குப்புவின் தம்பி குமார் பேசினான்: நண்பர்களே! இன்று நாம் கூடியிருப்பது ஏன் என்பதை நீங்கள் எல்லோரும் நன்கறிவீர்கள். எனது அண்ணாவும், நமது பாரதி சங்கத் தலைவருமான திரு. குப்பு அவர்களுக்குத் 'துப்பறியும் குப்பு' என்ற பட்டத்தைக் கொடுப்பதற்காகக் கூடியிருக்கிறோம். இந்த வைபவத்திற்குக் கோபாலைத் தலைமை தாங்கும்படி செயலாளர் என்ற முறையில் கேட்டுக் கொள்கிறேன்!

மீதமிருந்த மூன்று நண்பர்களோடு குப்புவும் சேர்ந்து, விடாமல் கை தட்டினான்.

தலைவர் கோபால் பேச ஆரம்பித்தான். அவன் தொண்டையில் என்ன அடைத்துக் கொண்டதோ! ஒரு முறை கனைத்துக் கொண்டான்.

''அன்புள்ள நண்பர்களே! நமது சங்கத் தலைவர் குப்பு அவர்கள் தமது உயிரைத் துரும்பாக மதித்து, பக்கா ரௌடி பரமசிவத்தைப் பாதையில் வழிமறித்து, கட்டிப் புரண்டு, உருண்டு, போலீசாரிடம் பிடித்துக் கொடுத்திருக்கிறார். இதை எண்ணிப் பார்க்கும்போது நமக்கெல்லாம் மிகப் பெருமையாக இருக்கிறது. அவருடைய தீரச் செயலுக்கு நம் பாராட்டுக்களைத் தெரிவிக்கத்தான் வேண்டும்!

''சப் இன்ஸ்பெக்டர் குப்புவுக்கு அன்பளிப்பாகக் கொடுத்த ஐந்து ரூபாய்க்கு ஒரு வெள்ளி மெடலை வாங்கி யிருக்கிறோம். அதில் துப்பறியும் குப்பு என்ற சொற்களைப் பொறித்திருக்கிறோம். அந்த மெடலை இப்போது குப்புவிற்கு உங்கள் சார்பில் அணிவிக்கிறேன். இனி எல்லோரும் குப்பு அவர்களைத் 'துப்பறியும் குப்பு' என்றே அழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்'' என்று கூறி முடித்தான்.

மெடலைப் பெற்றுக் கொண்டு குப்பு நன்றி தெரிவித்தான். அந்த மெடலைத் தனது சட்டையிலிருந்து ஒரு போதும் கழற்றப் போவதில்லை என்று பூரிப்போடு சொன்னான்.

குமார் பெரிய ரோஜா மாலை ஒன்றையும் குப்புவுக்குச் சூட்டினான்.

''இந்த மாலை ஒரு ரூபாய்க்கு ஆர்டர் கொடுத்துச் செய்து வந்தோம். நமது சங்கத்தில் இதுவரை யாருக்குமே இதுபோன்று அழகான மாலை சூட்டியதில்லை'' என்று பெருமையோடு பேசினான்.

அண்ணன் குப்புவுக்கு அளவற்ற மகிழ்ச்சி.

*   *   *

சாதாரண குப்பு 'துப்பறியும் குப்பு' ஆனது ஒரு சுவையான கதை.

ஒரு வாரத்திற்கு முன்பு ஒரு நாள் இருட்டும் சமயத்தில் பள்ளிக்கூடத்தில் விளையாடிவிட்டு,

குப்பு வீட்டை நோக்கி வந்துகொண் டிருந்தான். ஒரு சந்தின் முனையை அவன் நெருங்கியதுதான் தாமதம்.

''விடாதே, பிடி! பிடி!'' என்று பலர் சேர்ந்து கத்தும் கூக்குரல் குப்புவின் காதை அடைத்தது. திரும்பிப் பார்த்தான். தெருவில் போவோர் வருவோர் எல்லாம் அந்தத் திடீர் கூக்குரலைக் கேட்டு ஓட ஆரம்பித்தார்கள்.

குப்பு கோழைத்தனத்தில் பெயர் போனவன். இந்தக் கூக்குரல் அவனை அதிர்ச்சிக் குள்ளாக்கியது, என்ன செய்வது என்றே அவனுக்குப் புரியவில்லை! அவனும் தலைதெறிக்க ஓடினான்! ஓடினான்!

சில வினாடிகள் தாம்! வேகமாக ஓடிவந்த மற்றொரு மனிதனும் குப்புவும். ஒருவரோடொருவர் மோதிக்கொண்டார்கள். இருவருமே விழுந்தார்கள்! குப்புவிற்குக் கைகால்கள் நடுக்கம் கண்டன. பயத்தோடு பாய்ந்து அந்த மனிதனை அப்படியே கட்டிப் பிடித்துக்கொண்டான். அந்த ஆள் திமிறினான்! குப்பு அவன் நெஞ்சில் உருண்டு புரண்டான்!

அதற்குள் ஓடி வந்த கூட்டம் குப்புவைச் சூழ்ந்துகொண்டது. குப்புவுக்குக் கீழே கிடந்த ஆளை நாலைந்து பேர்கள் தூக்கி நிறுத்தி உதை கொடுக்க ஆரம்பித்தார்கள். ஓடிவந்த ஆட்களில் ஒருவன் குப்புவைத் தலைக்குமேல் தூக்கி ஆனந்தக் கூத்தாடினான்!

''சார், இந்தப் பையன் அவ்வளவு தைரியத்தோடு திருடன் மீது பாயாது இருந்தால், திருடன் ஓடியே போய் இருப்பான், சார்!'' என்றார் ஒருவர்.

''பாருங்க சார்! பையனுக்கு மூச்சு வாங்குகிறது. கைகால் ஆடுகிறது! இவ்வளவு பெரிய மனிதனை மடக்குவதென்றால் லேசான காரியமா?'' என்றார் பெரியவர் ஒருவர்.

குப்புவிக்கு ஏற்பட்ட நடுக்கம் கொஞ்சமும் தீரவில்லை!

அருகிலிருந்த போலீஸ் ஸ்டேஷனுக்குக் குப்புவும் திருடனும் அழைத்துச் செல்லப்பட்டார்கள்! சப் இன்ஸ்பெக்டர் குப்புவின் தீரத்தை மெச்சி ஐந்து ரூபாய் பரிசாகக் கொடுத்தார். திருடனிடமிருந்த பர்சில் ஆயிரம் ரூபாயலலவா அடங்கி யிருந்தது! குருட்டுத் தசை குப்புவுக்கு!

வீட்டுக்குள் நுழைந்த குப்புவுக்கு ஆனந்தம் தலைகால் புரியவில்லை! தம்பி குமாரை அழைத்தான்!

''டேய் குமார்! நாளை மாலையே நமது சங்கத்தில் எனக்கு ஒரு பாராட்டுக் கூட்டம் ஏற்பாடு செய்!'' என்றான்.

''ஆகட்டும்'' என்றான் குப்பு!

''மாலை ஒன்று நினைவிருக்கட்டும்!''

''மாலையா? அதற்குக் காசுக்கு எங்கே போவது?''

''அப்போ இந்தா, என் நன்கொடை ஒரு ரூபாய்! பெரிய மாலையாக வாங்கு!''

அண்ணன் தலைவர், தம்பி செயலாளர். அப்புறம், பாராட்டுக் கூட்டம் நடக்க யாரைக் கேட்க வேண்டும்?

துப்பறியும் சிங்கங்கள் கதைகளில் எந்த விதமாகக் காட்சியளிப்பார்களோ, அந்த முறைகளையெல்லாம் அப்பொழுதிலிருந்தே கையாள ஆரம்பித்தான் குப்பு. நேரே அப்பாவின் அறைக்குள் நுழைந்தான்!

''அப்பா!''

''என்னடா?''

''ஒரு துப்பறியும் கதைப் புஸ்தகம் வாங்கணும்; ஒரு ரூபாய்..''

''சீ..சீ...மூஞ்சியைப் பாரு! போய்ப் பாடத்தைப் படி! துப்பறியும் கதையாம்..துப்பறியும் கதை! துப்புக் கெட்டவனே! இங்கிலீஷ் பாடபுஸ்தகத்தைக் கொண்டுவா, இப்படி!''

குப்பு நடுங்கிவிட்டான்! அப்பா இப்படிச் சீறுவார் என்று அவன் எதிர்பார்த்தானா? கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டதுபோல இங்கிலீஷ் பாட புஸ்தகம் அல்லவா கொண்டு வரச் சொல்கிறார்! செம்மையாக மாட்டிக்கொண்டோம் என்று அவன் நெஞ்சு 'படக்-படக்' என்று அடித்துக் கொண்டது.

திண்ணையிலிருந்து விழுபவனைப் பஞ்சு மெத்தை தாங்கிக் கொள்வதுபோல, அவனுடைய ஆபத்தைப் போக்க அம்மா அங்கே காட்சி அளித்தாள்!

''இந்தாங்கோ! குப்புவுக்குத் துப்பறியும் புஸ்தகம் வாங்கிக் கொடுங்கோ! எவ்வளவு சமர்த்தாக அவன் திருடனைப் பிடித்துக் கொடுத்து, பரிசு வாங்கி வந்திருக்கிறான்! இன்னும் துப்பறியக் கற்றுக்கொண்டால் என் பிள்ளையின் முன்னால் யார் நிற்க முடியும்!'' என்று சிபாரிசு செய்ய ஆரம்பித்தாள் குப்புவின் அம்மா.

அப்பா வளர்த்தாமல் எட்டணா எடுத்துக் கொடுத்தார்!

* * *

'**ஆ**ற்றிலே பிணங்கள்' என்ற மர்மமான மயிர்க் கூச்செறியும் திரைப்படத்திற்குக் கியூ வரிசையில் நின்றுகொண்டிருந்த குப்பு தற்செயலாகத் தன் பைக்குள் கை வைத்தபோது திடுக்கிட்டான்! அங்கே இருந்த ஒரு ரூபாய் நோட்டைக் காணவில்லை! அவசரம்-அவசரமாக வீட்டிற்கு ஓடோடி வந்தான்.

''டேய் குமார்! என் பையில் ஒரு ரூபாய் நோட்டு வைத்திருந்தேனே; நீ எடுத்தாயா?'' துப்பறியும் புலி கர்ஜித்தான்.

''தெரியவில்லையே அண்ணா!''

''சாயந்தரம் நாலரை மணிக்கு

மேல் நமது வீட்டிற்கு யார் வந்தது? நம்முடன் எந்தெந்த நண்பர்கள் பேசிக்கொண் டிருந்தார்கள்?''

ஞாபக சக்தியில் அவ்வளவு திறமைசாலி குப்பு!

''ராஜு ஒருவன்தான் அண்ணா ஐந்து மணிவரை நம்முடன் பேசிக்கொண்டிருந்தான்!''

''நாலரை மணிவரை அந்த ரூபாய் நோட்டு என் பையில்தான் இருந்தது! ராஜுதான் எடுத்திருக்க வேண்டும்! இதோ, இப்போதே ஓடுகிறேன்! அந்தத் திருட்டுப் பயலை என்ன செய்கிறேன் பார்!''

குப்பு, ஆகாய விமானம் தரையில் ஓடுவதுபோல் பறந்தான்!

* * *

மணிக் கூண்டின் அருகில் வந்தபோது குப்புவின் கண்கள் ராஜுவைக் கண்டுவிட்டன. ''ராஜு! ராஜு!'' என்று கத்தினான்!

மெதுவாக நடந்துசென்றுகொண்டிருந்தராஜு திடீரென்று ஓடஆரம்பித்தான். குப்பு லேசில் விட்டுவிடுவானா அவனை? துரத்தினான்!

''சார்..சார்! அரைப்படி அரிசி கொடுங்கோ!'' என்று ராஜு ஒரு ரூபாய் நோட்டைக் கடைக்காரனிடம் கொடுப்பதற்குள் குப்பு அந்த நோட்டைப் பறித்துக்கொண்டான். ராஜு திகைத்தான்!

குப்பு நோட்டை உற்றுப் பார்த்தான்! அதில் குப்புவின் கையெழுத்து இருந்தது! ஆம், சந்தேகமே இல்லை! காணாமற்போன நோட்டுதான் அது!

ராஜுவைத் தனியானதோர் இடத்திற்கு அழைத்து வந்த குப்பு பளீரென்றுஓர் அறை கொடுத்தான்! ராஜு திடுக்கிட்டான்! குப்புவின் சட்டையைப் பற்றிக்கொண்டான்.

''ராஜு ஏண்டா, என்னைக் கண்டதும் ஓடி வந்தே?''

''உன்னைக் கண்டு நான் ஏன் ஓடணும்? மணிக்கூண்டு கடிகாரத்தைப் பார்த்தேன். நாழியாகிவிட்டது. அப்பா சீக்கிரம் அரிசி வாங்கி வரச் சொல்லியிருந்தார். அதனால்தான் ஓடிவந்தேன்! அது சரி, காரணமில்லாமல் ஏன் என்னை அடித்தாய்?'' ரோஷமாகத்தான் கேட்டான் ராஜு.

''வணக்கம், சோசியர் ஐயா, நம்ம குழந்தை சாதகத்திலே கொஞ்சம் அதிருட்டத்தை நெறைய வெச்சு எழுதுங்க!''

''திருட்டுப் பயலே, இந்த ரூபாய் நோட்டு உனக்கு ஏது? முதலில் அதைச் சொல்லு! அடித்த காரணம் அப்புறம் சொல்கிறேன்!''

''ஏதா? உன்னுடைய பாராட்டு விழாவுக்கு மாலை எங்கிருந்து வந்தது? அதற்காக உன் தம்பி கொடுத்தான், கேட்டுப் பார்!''

''அடடா! ராஜு, என்னை மன்னித்துவிடு'' என்று குப்பு எடுத்தான் ஓட்டம்.

வீட்டு வாசற்படியை மிதித்தவுடன்தான் நின்று மூச்சு விட்டான்! தனது சட்டைப் பையைத் திடீரென்று பார்த்தான்: அங்கே வெள்ளிப் பதக்கம் இல்லை!

'உனக்கும் துப்பறியும் திறமைக்கும் கொஞ்சமும் பொருத்தமில்லை' என்று அறிவிப்பதுபோல் அது அப்போது ராஜுவின் கையில் அகப்பட்டுக்கொண்டுவிட்டது. கன்னத்தில் அடித்ததற்கு மன்னிப்புக் கேட்டால் ஒழிய ராஜு மெடலைக் கொடுக்கிறதாக இல்லை. அத்துடன் பாராட்டுக் கூட்டம் நடந்த லட்சணத்தையும் வெளியில் சொல்லி விடுவதாக இருந்தான்.

அவர் தந்த பரிசு

எஸ். விசுவநாதன்

"அதோ, அந்த வெளிர் நீல நிறத்தில் நெருக்கமாகக் கோடு போட்டிருக்கிறதே! அதை எடுங்கள், பார்க்கலாம்!'' என்றான் கோபாலன்.

''அதெல்லாம் விலை ஜாஸ்தி இருக்கும்டா கோபு! வேறே 'சீப் ரேட்'டிலே ஏதாவது நல்ல துணியாயிருந்தா எடப்பா!'' என்று உடனே இடைமறித்துச் சொன்னார் அவன் தகப்பனார். கடை ஆள் 'சொர சொர'வென்றிருக்கும் நாலைந்து ரகத் துணிகளை எடுத்துப் போட்டான்.

கோபுவுக்கு அந்தத் துணிகளையெல்லாம் பார்க்கவே பிடிக்கவில்லை. ''ஐய, இது என்ன துணி! போட்டுக்கொண்டால் மேலெல்லாம் உறுத்தும்! போட்டால், மாடி வீட்டு ரங்கசாமியின் 'பள பள' வென்ற வழவழப்பான சட்டைபோலப் போட வேண்டும்!'' என்று நினைத்தான் கோபு.

''இது நன்றாயில்லை அப்பா! வேறு ஏதாவது..'' என்று இழுத்தான் அவன்.

"எல்லாம் இதிலேயே நல்லதாகப் பார்த்து எடுத்துக்கொள்! மற்றதெல்லாம் விலை ரொம்ப அதிகம்!'' என்று அழுத்தமாகச் சொன்ன அவன் தகப்பனார், நீல முரட்டுத் துணி ஒன்றைப் பிரித்துப் பார்த்தார்.

''எனக்குப் பிடிக்கவேயில்லை, அப்பா அது!'' என்றான் கோபு; அவன் கண்முன், லேசான சந்தன நிறத்தில் குமார் போட்டுக்கொண்டிருந்த 'ஸ்லாக் ஷர்ட்' வந்து நின்றது. ஒரு பெருமூச்சு விட்டான். சரிகை அங்கவஸ்திரம் தரித்த யாரோ ஒரு கனவான் இவர்களையே அடிக்கடி பார்த்துக்கொண்டிருந்தார். ஒன்றிரண்டு பேராகக் கடையில் கூட்டமும் வந்துவிட்டது.

''அதோ, அந்தச் சாக்லெட் வர்ணத் துணி என்ன விலையப்பா இருக்கும்?''

''அதெல்லாம் விலை ஜாஸ்தி, தம்பி! கெஜம் இரண்டேகால் ரூபாய் ஆகிறது!'' என்று சொல்லி விட்டு அலுப்புடன், கெஜக்கோலை இடது உள்ளங்கையில் தட்டிக் கொண்டான் கடை ஆள்.

''இதிலேயே எடப்பா! எல்லாம் இது போதும்!'' என்று உறுதியாக, ஆத்திரத்துடன் கோபுவின் தகப்பனார் சொல்லிவிட்டு வெளிர் பச்சை நிறத்தில் ஒரு துணியைக் காட்டினார்.

கோபு ஒன்றுமே பேசவில்லை. அவனுக்கு ஒரே வெறுப்பாக இருந்தது. அதே மாதிரியிலேயே ஒரு முரட்டுத் துணியை நிஜாருக்குமாக எடுத்துக்கொண்டு, பணத்தைக் கொடுத்துவிட்டு வெளியே வந்தார் அவன் தகப்பனார். குனிந்த தலையுடன் அவர் பின்னால் வந்தான் கோபு. ''சாமி, குளிர் நடுக்குது!'' என்று ஒரு பிச்சைக்காரச் சிறுவன் உடம்பைப் பொத்திக்கொண்டு கேட்டபொழுது எவ்வளவு அபாரமான சட்டை ஒன்றை நாகராஜ் உள்ளிருந்து கொண்டுவந்து கொடுத்தான், அன்று இரவு! அடேயப்பா! அந்த மாதிரிச் சட்டையையெல்லாம் நம்மால் நினைத்துத்தான் பார்க்க முடியுமே ஒழிய..'' என்று நிறைவேறாத நினைவு ஒன்றை அடக்கிக்கொண்டு, ஆழ்ந்த பெருமூச்சு ஒன்றுமட்டும் விட்டான் கோபாலன்.

''விடுவிடென்று நடந்தார்கள் அப்பாவும் பிள்ளையும். 'சர்..சர்' ரென்று பஸ்கள் பறந்துகொண்டிருந்தன. கடைத் தெரு, பங்களாக்கள் எங்கும் ஒளி மயமாக்கும் மின்சார விளக்குகள் ஆங்காங்கே ஒளிர்ந்தன. 'உள்ளே மனம் இருண்டு சூனியமாய் இருந்தாலும், வெளியேயாவது பளிச்சென்று

இருக்க வேண்டாமா?'' என்று அவ்வொளி வெள்ளம் கேட்பதுபோல் இருந்தது.

'பூம்..பூம்' என்று அலறிக் கொண்டு அவர்களைத் தாண்டி ஒரு கறுப்புக்கார் சென்றது; கடையில், சரிகை அங்கவஸ்திரத்துடன் காட்சியளித்த அந்தக் கனவான் தான், கோபுவைப் பார்த்துக் கொண்டே சென்ருர் அந்தக் காரில்!

தேர்தல் கூச்சலும், தினசரிக் கூச்சலும் கலந்த அந்தச் சாலையிலே நடந்தனர் இருவரும். ''என்னடா, துணி பிடித்ததோ, இல்லையோ?'' என்று கேட்டார் தகப்பனர். கோபுவுக்கு அழுகை வருவதுபோல் இருந்தது. ஒன்றும் பேசாமல், காது கேளாததுபோல, வேறெங்கோ முகத்தைத் திருப்பிக் கொண்டான். அவன் முகத்தை அவர் அப்போது கண்டிருந்தால், நீர் தேங்கும் விழிகளுடன், வேதனை குமுறும் நெஞ்சத்தைப் படம் பிடித்துக் காட்டுவதையே கண்டிருப்பார்!

போகும் வழியிலேயே அவர்கள் ஒரு தையற்காரரின் கடையில் ஏறி அளவு கொடுத்துவிட்டு, வீட்டை நோக்கி நடந்தனர்.

2

''கோபு! சட்டை தைக்கக் கொடுத்தாகிவிட்டதோடா? துணி பிடித்ததா? எந்த மாதிரி தைக்கச் சொன்னுய்? சங்கரனுடையதைப் போல் தைத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லிக்கொண் டிருந்தாயே!'' என்று அடுக்கினுள் அம்மா.

''ஆமாம்! கிங்கரனுடையதைப் போல் தைத்துக்கொள்ளுகிறேன்! சட்டையைப் பார்க்கவில்லை. சட்டையை! பலாப்பழத் தோல், மாதிரி 'சொர சொர'வென்று! என்றைக்காவது, இரண்டு வருஷத்துக்கு ஒரு முறை ஒரு சட்டை: அதுவும் இப்படி அவலம்போல!'' என்று வெறுப்புடன் சொல்லிக் கொண்டு நகர்ந்தான் கோபு.

எப்போதோ ஒரு தடவை, துணி எல்லாம் நைந்து, கிழிந்துபோன பிறகு, இனி அதனுல் ஒன்றும் பயனில்லை என்று ஆன பிறகுதான்—வேருெரு சட்டையும் நிஜாரும் அவனுக்குக் கிடைக்கும்! அவ்வளவு அதிர்ஷ்டம்! அதுவும் இப்படிப் பட்ட மட்டத் துணிகளே ஒவ்வொரு தடவையும்! அவனுக்குத் தான் எப்படியிருக்கும்! ''இதோடு, இன்ருேடு, ஆயிற்ரு? இன்னும் துணி வாங்கத்தான் போகிறது. அடுத்த தடவை நல்லதாகப் பார்த்து எடுத்துக்கொண்டால் போகிறது!'' என்று அவன் அம்மா வழக்கப்படி இரண்டு பக்கமும் பேச முடியாதபடி சமாதானம் கூறினுள்.

திருப்தியடைய வேண்டியது தான்; ஆனுல் ஒவ்வொரு முறையும் இப்படியே என்ருல்?

முன்பு ஏதோ ஒன்றரை, இரண்டு வருஷங்களுக்குமுன், ஒரு சுதந்தர தினத்தின்போது, பள்ளிக்கூடத்தில் எல்லோரும் காக்கி நிஜாரும், வெள்ளைச் சட்டையும் அணிந்து வர வேண்டும் என்று ஆசிரியர் உத்தரவிட்டார்; அப்போது ஒரு காக்கி நிஜாரும் வெள்ளைச் சட்டையும் எப்பாடோ பட்டுத் தைத்துக் கொடுத்தார் அவன் அப்பா. அதையே வைத்துக்கொண்டு இவ்வளவு நாள் ஓட்டியாகிவிட்டது. இன்று அதைப் பார்க்கச் சகிக்கவில்லை; சாணிச் சுருணைபோல் ஆகிவிட்டது. அதற்கும் அவனுக்கும் நாளையோடு 'பந்தம்' விடுகிறது! நாளைதான் அந்தப் பிடிக்காத 'புதுச் சட்டை' வந்துவிடுமே!

3

மறுநாள் மாலை கால்பந்து விளையாடிவிட்டுத் திரும்பும்போது கோபுவும் மனேகரும் சுவாரசியமாகப் பேசிக்கொண்டு வந்தார்கள். முன்னுல் ஒரு சைக்கிள், மணி அடித்துக்கொண்டு வருவதையும், பின்னுல் 'லொட் லொட்' என்று ஒரு ஜட்கா வருவதையும் கவனியாது நடந்தான் கோபு. மனேகர் 'சட்'டென்று ஒதுங்கிக்கொண்டு விட்டான். ஜட்காவுக்கு ஒதுங்கிக்

கொண்டு நகரும்பொழுது, முன்ஞல் வந்த சைக்கிள் கோபுவை இழுத்துத் தள்ளியது. சைக்கிள் 'ஹாண்டில் பார்' கோபு அணிந்திருந்த புதுச் சட்டையின் பொத்தான் போடும் இடத்தருகே சிக்கி ஓர் இழுப்பு இழுத்துவிட்டது. 'டர் ர் ர்!'

சைக்கிள்காரன் ஏதோ முணுமுணுத்தபடி சைக்கிளை நிறுத்தி வைத்துவிட்டுத் தாவி ஏறிப் போய் விட்டான். மனேகர் வந்து தூக்கி விட்டதும்தான் கோபு எழுந்திருந்து மண்ணைத் தட்டிவிட்டுக் கொண்டான். நேற்றுத்தான் துணி எடுத்து, இன்று தைத்துப் போட்ட சட்டை! 'பாக்கெட்' பக்கம் அப்படியே கிழிந்து 'லாலீ, பீலி' என்று தொங்கியது. சட்டை பிடிக்கத்தான் இல்லை என்ருலும் எப்போதோ ஒரு தடவை அரும்பாடு பட்டுத் தைப்பது, அதுவும் கிழிந்துபோவது என்ருல்! அவனுக்கு அழுகை வந்தது. மனேகர் தைரியம் சொன்னுன். வீட்டுக்குள் போகும்போது குளிரால் நடுங்கு

கிறவன் மாதிரி இரு கைகளையும் உடலோடு ஒட்டி வைத்துக்கொண்டு பயத்துடன் போனான். அப்பாவைப் பார்க்கவே அஞ்சினான். அம்மாவின் எதிரேயே நின்று பேசவில்லை. என்றாலும் அவர்களுக்குத் தெரியாமல் போய்விடுமா? தெரிந்தது. 'தன் பொருளையே சரியாகப் பார்த்துக்கொள்ளத் தெரியவில்லை என்றால் என்ன செய்வது? எப்படியோ போ!' என்றார் அப்பா. அம்மா வருந்தினாள். கோபு ஒன்றுமே பேசவில்லை.

4

இது நடந்து சரியாக இரண்டு நாட்கள் ஆயின. பள்ளிக்கூடத்தில் வருடாந்தர விழா, கட்டுரை-பேச்சு-பாட்டுப் போட்டிகளின் பரிசளிப்பு விழா எல்லாம் ஏற்பாடாகிக்கொண்டிருந்த சமயம். தமிழ், ஆங்கிலம் இரண்டு நாடகங்களுக்கும் ஒத்திகை நடந்துகொண்டிருந்தது. கதாநாயகனாக நடிக்கக் கோபுவை வற்புறுத்திக்கொண்டிருந்தனர் எல்லோரும். கோபு ஒன்றும் பிடிக்காமல் மறுத்து வந்தான். அவனுக்கு அப்போது இருந்த மன நிலையில் நடிக்கவே பிடிக்கவில்லை. அன்று பள்ளிக்கூடத்தில்கூட, தமிழ் வகுப்பில் ஆசிரியர் சொல்லிவிட்டுப் போயிருந்தார், கோபு தமிழ் நாடகத்தில் நிச்சயம் பங்குகொள்ள வேண்டும் என்று.

பள்ளிக்கூடம் விட்டுத் திரும்பும் பொழுது நாலைந்து தோழர்களுடன் இதைப் பற்றித்தான் அவன் பேசியவாறு வந்துகொண்டிருந்தான்; கிழிந்துபோன சட்டையைத்தான் தைத்துப் போட்டுக்கொண்டிருந்தான்; வேறு வழி?

''நான் நிச்சயம் இந்த வருடம் நாடகத்தில் நடிக்கப்போவதில்லை, குமார்! எனக்கு ஒன்றுமே பிடிக்கவில்லை!'' என்று அழமாட்டாக் குறையாகப் பேசினான் கோபு.

ஒருவன்: டேய், நான் ஊரிலேருந்து வரும்வரை இந்த நாயை நீதான் நல்லாக் கவனிச்சுக்கணும்.

மற்றவன்: நம்பகிட்டே நாய் வேறு, நண்பன் வேறு என்ற வித்தியாசமே கிடையாது. ஏதோ அது வர்றது நீயே நம்ம வீட்டுக்கு வர்ற மாதிரிதான்!

—P. நடராஜன், உடன்குடி.

அவன் இதைப் பேசி முடித்திருப்பான்; அதற்குள் அவனைத் தாண்டி சற்றுத் தள்ளி ஒரு கறுப்புக் கார் வந்து நின்றது. உள்ளிருந்து ஒருவன் டிரைவர் போலும்-இறங்கி வந்து, ஒரு சிறு சீட்டைக் கோபுவிடம் கொடுத்துவிட்டுக் காரில் ஏறிக்கொண்டு 'கிர்'ரென்று போய்விட்டான். புழுதியைக் கிளப்பிவிட்டு மறைந்தது கார்.

"என்ன கோபு? யார் கொடுத்தது? என்ன அது?" என்று எல்லோரும் பரபரப்புடன் கேட்டனர்.

கோபு சீட்டைப் பிரித்தான். அதில் எழுதியிருந்தது இதுதான்:

"பள்ளி நாடகத்தில் நடிக்க மறுக்கிறாயாமே! நான் கேள்விப்பட்டேன். நடி; முதற் பரிசு பெறும்படி நடி! நான் தனியே, நீ விரும்பும் பரிசு ஒன்றை அளிக்கிறேன். நடிக்க மறுக்காதே!"

கோபுவுக்கு ஒன்றுமே புரியவில்லை. ஒரே குழப்பமாகிவிட்டது அவனுக்கு. யார் அது? அவனை ஏன் வற்புறுத்த வேண்டும்?

"பார்த்தாயா கோபு? எல்லோரும் நீதான் நாடகத்தில் நடிக்க வேண்டுமென்று விரும்புகின்றனர். நீ கட்டாயம் நடித்துத்தான் ஆக வேண்டும்!" என்றனர் எல்லோரும் ஒரு முகமாக.

'சரி' என்பதற்கு அடையாளமாகத் தலை ஆட்டினான் கோபு.

யார் அந்தச் சீட்டைக் கொடுத்திருப்பார்கள் என்று வெகு நேரம் யோசித்தான். அந்தக் கறுப்புக் காரை ஞாபகத்தில் கொண்டு வந்து பார்த்தான். ஒன்றும் புரியவில்லை. 'ஒரு நாளைக்கு எத்தனையோ கறுப்புக் கார்களைப் பார்க்கிறோம். அது யாருடையது? யாருடையதாயிருந்தால் என்ன? நடிக்கச் சொல்லி வற்புறுத்துகிறார்கள். அவ்வளவு தானே! நடித்துவிட்டால் பிறகு தெரிகிறது, யார் அந்த அநுதாபி என்று!' என எண்ணியபடியே வீடு நோக்கி நடந்தான் கோபு.

அன்று அந்த விஷயத்தை அம்மாவிடம் அவன் சொல்லும்போது, அவனைவிடத் திகைப்பாக இருந்தது அவளுக்கு! "என்னவோ அப்பா! நாடகம், கீடகம் என்று படிப்பை மட்டும் மறந்துவிடாதே!" என்று இயற்கைப்படி பேசினாள் அவள்.

5

நாடகம் ஆரம்பமாகியது.

நாடகத்திற்கான ஒத்திகைகளில் எல்லாம் தவறாமல் கலந்துகொண்டிருந்ததால், கோபுவால் சிறப்பாக நடிக்க முடிந்தது. ஆங்கிலம்-தமிழ் இரண்டு நாடக வசனங்களையும் திக்காமல், திணறாமல் உணர்ச்சியுடன் பேசினான்; உயர்வாக நடித்தான். அவன் மேடையில் தோன்றும் ஒவ்வொரு முறையும் பார்க்க வந்திருந்தோரின்-குறிப்பாக மாணவர்களின் - முகத்தில் மகிழ்ச்சியும், அதன் காரணமாகக் கை தட்டலும் பொங்கி நிறைந்தன.

நாடகம் முடிந்தது.

ஆங்கில நாடகத்தில் அவன்

நடிப்புச் சிறப்பாக இருந்ததாகவும், தமிழிலும் அவன் நடிப்புச் சோடை போகவில்லை என்றும் எல்லோரும் முணுமுணுத்தனர். தலைவரும், பள்ளித் தலைமை ஆசிரியரும் மேடை மீது ஏறி நின்று கொண்டனர். 'ஸ்டே'ஜிலிருந்தபடியே தலைவரைக் கூர்ந்து பார்த்தான் கோபு. அவரை எங்கோ பார்த்த ஞாபகம் அவன் நினைவு அலைகளினூடே பாய்ந்து பாய்ந்து மீண்டது.

''இரண்டு நாடகங்களிலும் கோபாலன்தான் நன்ருக நடித்தான் என்று நாங்கள் தீர்மானிக்கிருேம்; அதனல் பள்ளியின் சார்பில் மாணவன் கோபாலனுக்கு இந்தப் பரிசுகளை அளிக்கிருேம்! அவன் மேலும் மேலும் படிப்பிலும், நடிப்பிலும் சிறந்து மேம்பட வாழ்த்துகிருேம்!'' என்று சபையினரின் பலத்த கை தட்டலுக்கிடையே கூறின தலைவர், பட்டு நூலால் கட்டப்பட்ட ஆங்கிலப் புத்தகம் ஒன்று, தமிழ்ப் புத்தகம் ஒன்றும் கொடுத்தார். தொடர்ந்து, ''இந்தச் சிறுவன் பேரில் எனக்கு ஏற்பட்ட அன்பினல், என்னுடைய தனிப்பட்ட பரிசாக இதை அளிக்கிறேன்!'' என்று சதுரமான அட்டைப் பெட்டி ஒன்றைக் கொடுத்துவிட்டுத் தலைமை ஆசிரியருடன் வெளியே வந்துவிட்டார்.

கோபு பெட்டியை ஆவலுடன் திறந்து பார்த்தான்: சாக்லெட் வர்ண நிஜார்; சந்தன நிற முழுக் கைச் சட்டை; இவை ஒரு ஜோடி. பளபளவென்று நைஸான வெள்ளைச் சட்டையும், வெள்ளை நிஜாரும் ஒரு ஜோடி. இரண்டுக்கும் இடையே ஒரு துண்டுச் சீட்டு:

''தம்பி! அன்று துணிக்கடையில் நீ உன் தகப்பனருடன் வந்திருந்தபோது உன்னைக் கண்டேன். (சரிகை அங்க வஸ்திரத்துடன் அமர்ந்திருந்தேனே, நினைவிருக்கிறதா?) உன் கண்களில் தேங்கியிருந்த துக்கம் எனக்கு நன்கு தெரிந்தது. அதற்காகவே, அன்றே, உனக்கு ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் நல்ல ஆடையைப் பரிசளிக்க வேண்டுமென்று தீர்மானித்தேன். அன்றைக்கு, 'நாடகத்தில் நடி!' என்று சீட்டு அனுப்பியது நான்தான்!''

கோபு தலையை நிமிர்த்திப் பார்த்தான்:

அதே கறுப்புக் கார்! அவர் ஏறிக் கொண்டதும் பறந்துவிட்டது. புழுதி மட்டுமே படலமாக நின்றது.

நாடகம் முடிந்து, போகும் மக்களின் கூச்சல் கோபுவின் செவியில் கேட்கவேயில்லை. அன்பு, பெருந்தன்மை என்று எங்கோ, யாரோ முழுங்குவது போன்ற ஓர் ஓசை மட்டுமே அவனுக்குத் துல்லியமாகக் கேட்டது!

காந்தம்

ஈ. ஜி. என்.

ராஜனும், ராமுவும் மாமாவின் அறைக்குள் வேகமாக ஓடி வந்தனர்.

''மாமா, ராமு ஒரு பிளேடு (Blade) வைத்திருக்கிறான். அது சிறிய ஆணி, குண்டுசி முதலியவைகளைத் தூக்குகிறது. அதேமாதிரி எனக்கும் இந்தப் பிளேடில் காந்தம் ஏற்றிக் கொடுங்கள்'' என்று மாமாவின் முன் ஒரு பிளேடை நீட்டினான் ராஜன்.

''ஏன், ராமுவின் பிளேடிலிருந்து உன்னுடைய பிளேடிற்கும் காந்தம் ஏற்றிவிடேன்'' என்றார் மாமா.

''அவனுடைய காந்தம் குறைந்து விடுமென்று தரமாட்டேன் என்கிறான்'' என்றான் ராஜன்.

''காந்தம் உண்டாக்கும் விதத்தை உங்களுக்குக் கற்றுக் கொடுக்கிறேன். அதலிருந்து எவ்வளவு பிளேடுகளுக்கு வேண்டுமானாலும் காந்தம் ஏற்றலாம்'' என்று சொல்லி அவர்களை அழைத்துக்கொண்டு தம் சோதனைச் சாலையில் நுழைந்தார் அவர்.

அங்கிருந்த மேஜை அறையிலிருந்து அவர் ஒரு சாதாரண ஆணியைப் பொறுக்கி எடுத்தார். (படம்-1)

''இந்த ஆணியில் காந்தம் இருக்கிறதா என்று பாருங்கள்'' என்று சொல்லி அதை அவர்களிடம் கொடுத்தார் மாமா.

உடனே ராமு அதைத் தன் பிளேடின் பக்கத்தில் கொண்டு வந்தான். அவனுடைய பிளேடில் ஏற்கனவே காந்த சக்தி இருந்ததால் அது ஆணியில் ஒட்டிக் கொண்டது.

''ஓ! காந்தம் இருக்கிறது! அதனால்தான் என் பிளேடு இதில் ஒட்டுகிறது'' என்றான் ராமு.

மாமா சிரித்துவிட்டு, ''காந்தம் ஆணியில் இல்லை. உன் பிளேடில் காந்தம் இருப்பதால் அது ஆணியில் ஒட்டிக்கொள்கிறது. இப்பொழுது ராஜனுடைய பிளேடை இந்த ஆணியில் ஒட்டச் சொல், பார்க்கலாம்'' என்றார்.

அப்படியே செய்து பார்த்த







அவர்களிருவரும் அது முடியாமல் போகவே மாமா சொல்வதை ஒப்புக் கொண்டனர். மாமா அந்த இரும்பு ஆணியை வாங்கிக்கொண்டார். ''இப்பொழுது நான் மந்திர சக்தியால் இந்த ஆணிக்குக் காந்தம் வரச்சொல்கிறேன், பாருங்கள். ஆனால் நான் சொன்னவுடன்தான் காந்தம் வரும். போகச் சொன்னால் போய்விடும்'' என்றார். அவர்கள் இருவரும் மாமா செய்வதைக் கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தனர். மாமா வார்னிஷ் பூசப்பெற்ற கம்பிச் சுருள் ஒன்றிலிருந்து கம்பியை எடுத்து ஆணியில் சுற்ற ஆரம்பித்தார். (படம்-2) ஆணியின் ஓரங்களில் இடம் விட்டு நடுவில்மட்டும் கம்பியைச் சுற்றினார். பின்பு அந்த ஆணியை ஒரு தாங்கியில் (Stand) பொருத்தினார். கம்பியின் இரண்டு முனைகளையும் வார்னிஷை நீக்கிச் சுத்தம் செய்து ஒரு முனையை அழுத்து முறை 'ஸ்விட்ச்' (Switch) வழியாக பாட்டரியின் ஒரு முனையில் பொருத்தினார். மற்றொரு முனையைப் பாட்டரியின் மற்றொரு முனையில் பொருத்தினார். இவற்றைச் செய்து முடித்தவுடன் அவர், ''ராமு, நீ இப்பொழுது ஓர் இரும்பு ஊசியை ஆணியில் ஒட்ட வை, பார்க்கலாம்'' என்றார்.

அதன்படி செய்து பார்த்த ராமு, ''ஒட்டவில்லையே'' என்றான்.

''இப்பொழுது பார்!'' என்று சொல்லியபடி பொத்தானை அழுத்தினார் மாமா.

''அடே! இப்பொழுது ஒட்டிக் கொண்டதே'' என்று ஆச்சரியத்துடன் இருவரும் கூவினார்கள்.

''இப்பொழுது இன்னொரு மந்திரம் போடுகிறேன், பார்!'' என்று ஸ்விட்சை விட்டுவிட்டார் அவர். உடனே ஊசியும் கீழே விழுந்துவிட்டது. விழுந்த ஊசியை மறுபடியும் ஒட்டவைக்க ராஜனும் ராமுவும் பல தடவை முயன்றும் முடியவில்லை. அப்பொழுது மாமா அவர்களுக்குக் காந்தம் செய்யும் முறையைப் புத்தகத்திலிருந்து படங்களைக் காட்டி விளக்க ஆரம்பித்தார்.

''இங்கிலீஷ் படிக்கிறயா? எனக்குக்கூடத் தெரியுமே!''

''அப்போ எ. பி. ஸி. டி. எல்லாம் தெரியும்னு சொல்லு''

''அடேப்பா, அதெல்லாம் எனக்குத் தெரியாது. அப்பா இங்கிலீஷ் படிப்பா. அதான் எனக்குத் தெரியும்.''

''இதைப் பாருங்கள். இந்த மாதிரி ஆணியைத்தான் முதலில் நான் எடுத்துக்கொண்டேன். (படம் 1) இதில் நான் கம்பியைச் சுற்றிய மாதிரியை இந்தப் படங்கள் (2a, 2b, 2c) காட்டுகின்றன. இதைச் சுற்றும்பொழுது ஒரே திசையில் சுற்றியிருப்பதைக் கவனியுங்கள். சுற்றி முடித்ததைப் படம் (2c) காட்டுகிறது. இந்தக் கம்பியின் இரு முனைகளையும் ஒரு பொத்தானின் (Switch) வழியாகப் பாட்டரியுடன் பிணைத்திருப்பதை இந்தப் படத்தில் கவனியுங்கள். (படம்-3). இப்பொழுது பொத்தானை அழுத்தினால் கம்பிச் சுருளில் மின்சாரம் பாய்கிறது. அதனால் ஆணி காந்தமாக மாறுகிறது. மின்சாரம் பாய்வது நின்றால் காந்த சக்தியை ஆணி இழந்துவிடுகிறது. அதைத்தான் இப்பொழுது நீங்கள் பார்த்தீர்கள்'' என்றார்.

''ஆனால் ராமுவின் பிளேடில் எப்போதும் காந்தம்இருக்கிறதே?'' என்றான் ராஜன்.



"அவசரப்படுகிருயே. அதைத்தான் சொல்ல வருகிறேன். ஆணிபோன்ற இரும்புத்துண்டுகள் தேனிரும்பு (Soft-Iron) என்று சொல்லப்படும். இவைகளுக்குக் காந்த சக்தியைத் தேக்கி வைக்கும் சக்தி கிடையாது. ஆனுல் மற்ருெரு வகை இரும்புக்கு எஃகு (Steel) என்று பெயர். இந்த வகை இரும்பு காந்தமாக்கப் பட்டால் அது நிலைக் காந்தமாக மாறுகிறது. இதைப் பாருங்கள்" என்று தாம் செய்திருந்த மின்சார காந்தத்திலிருந்து ஆணியை உருவி எடுத்து விட்டு அதற்குப் பதிலாகத் துணி தைக்கும் ஊசி ஒன்றை அந்தச் சுருளில் வைத்து மின்சாரத்தைச் செலுத்தினுர். ஒரு நிமிஷம் கழித்து ஊசியை எடுத்துப் பரிசோதித்தபொழுது அது நிலைக் காந்தமாக மாறியிருப்பது தெரிந்தது.

"இது காந்தமாவதற்குக் காரணம் இது எஃகினுல் ஆனது. 'பிளேட்' போன்றவைகளும் இதே வகை இரும்பினுல் ஆனதுதான்" என்று மாமா விளக்கினுர். பிறகு அவர் முன்போலவே ஆணியைக் கம்பிச் சுருளில் பொருத்தி வைத்து ஸ்விட்சை அமுக்கினுர். ராஜனைப் பார்த்து, "இப்பொழுது உன் பிளேடை ஆணியில் ஒட்டவை" என்ருர்! அப்படியே செய்தான் ராஜன். சில நிமிஷங்கள் கழித்து பிளேடை எடுத்தார் மாமா.

ஆணியோடு ஒட்டப்பட்டிருந்த பக்கம் பென்சிலால் × என்ற குறியிட்டு அதை அவர்களிடம் கொடுத்துப் பரிசோதிக்கச் செய்தார். அதில் காந்தம் இருப்பதை அவர்கள் கண்டனர். அதே போல மேலும் இரண்டு பிளேடுகளுக்குக் காந்தம் ஏற்றி அவற்றின் மேலும் முன்போல் × குறியிட்டார். பிறகு சொல்லி இரண்டு தீப்பெட்டிகளில் இரண்டு காந்தம் ஏற்றிய பிளேடுகளை நிறுத்தினுர். அவற்றின் குறியிட்ட பக்கம் மேலிருக்கும்படி அமைத்து ஒன்றுக்கொன்று சுமார் ¾" தூரத்தில் வைத்தார். நடுவில் மற்ருெரு காந்தம் ஏற்றிய பிளேடின் × குறி மேலே இருக்கும்படி நிறுத்தினுர். அந்த பிளேட் ஆதாரமின்றியே நடுவில் நின்றது. அதைக் கண்ட இரு சிறுவர்களும் அளவில்லாத ஆச்சரியம் அடைந்தனர் அப்பொழுது மாமா ஒரு தீக்குச்சியை ஏற்றி அதை ஒரு பிளேடின் பக்கம் கொண்டு வந்தார். அப்பொழுது நடுவிலிருந்த பிளேடு தீக்குச்சி யிருந்த பக்கம் சாய்ந்தது. இதற்குப் பின் வருமாறு விளக்கம் கூறினுர்:

"பிளேடின் ஒரே துருவங்கள் ஒன்றையொன்று தள்ளுகின்றன. அதனுல்தான் ஒரே துருவமுள்ள இரண்டு பிளேடுகளுக்கு நடுவில் மூன்ருவது பிளேடு தனியாக நிற்கிறது. உஷ்ணத்தினுல் காந்த சக்தியைப் பிளேடு இழக்கிறது. அதனுல்தான் பிளேடு அந்தப் பக்கம் சாய்கிறது."

போர் எடுத்துவிட்டுப் பார்த்ததும் இடி இடியென்று சிரிக்க ஆரம்பித்தனர் அவர்கள்!

ஆம்....உருவம் படுத்திருந்த இடத்தில்......

அழகாக இரண்டு மூன்று தலையணைகளும், தலையிருக்க வேண்டிய இடத்தில் சிறு துணிமூட்டை ஒன்றும்....

சேகரைக் கட்டிக்கொண்டான் சுரேஷ். ஆம்..அவன் மட்டும் இரண்டு நாட்கள் முன்பு யோசனை கூருவிட்டால்....?

முன்னெச்சரிக்கையாகத் தனக்கு ஆபத்து நேரிடும் என்று சந்தேகப்பட நேர்ந்தால் தனது பழக்க வழங்கங்கள், நடையுடை பாவனைகள் யாவற்றையும் அடியோடு மாற்றிக்கொள்ள வேண்டும் என்ற பொன்னுன யோசனையை மட்டும் சேகர் கூருவிட்டால்....?

மர்மக் கடிதத்தைக் கண்டு மட்டும் சேகர் உஷார் செய்யாவிட்டால்....?ஆம்.....சேகரின் ஆலோசனைப்படி படுக்கையைத் தன் படிக்கும் அறைக்குச் சுரேஷ் மாற்றிக் கொண்டதால்தான் இந்த....

மர்மக் கடிதம், சுருள் கத்தி, ஜிம்மியின் கடிதம்....இன்னும் இதுபோல் எவ்வளவு எதிர்பார்க்க வேண்டுமோ? யாவற்றிலும் சுருள் கத்திச் சம்பவம்தான் சுரேஷை மிகவும் கலக்கிவிட்டது. அதை மட்டும் இன்னுமொரு தடவை பார்த்திருந்தால் மூர்ச்சையே போட்டு விழுந்திருப்பான்.

சேகர், யாவற்றையும் படுக்கையறையில் ஒழுங்கு செய்துவிட்டு, சம்பவம் ஒன்றும் நடக்காதது போல் செய்துவிட்டான். ஞாபகமாகக் கத்தியைத் தன்னுடன் எடுத்துச் சென்றுவிட்டான்.

''சுரேஷ், இவை யாவும் உன்னை எச்சரிக்கை செய்பவைதான். ஆனால் உன் உயிருக்கு மட்டும் ஆபத்து ஏற்படாது. அது மட்டும் நிச்சயம். நம்மை இந்த விஷயத்தில் ஈடுபடத் தூண்டியவன், நமக்கு உதவி செய்வானே தவிர கைவிடமாட்டான். இதை மட்டும் தாரகமந்திரமாக எடுத்துக்கொள். இதற்காகக் கலங்க ஆரம்பிப்பது மடத்தனம்'' என்று சுரேஷை மேன்மேலும் உற்சாகப்படுத்திக் கொண்டே இருந்தான்.

பிலிம்கள் கழுவப்பட்டு, பிரிண்ட் செய்து வந்தாகிவிட்டன. நம்பகமான, முன்பே பழக்கமிருந்த ஒரு போட்டோக்காரரிடம்தான் கொடுத்திருந்தான் சேகர். ஒரு படமாவது அதிர்ஷ்டவசமாக வீணுகவில்லை. மிகவும் கச்சிதமாக விழுந்திருந்தன படங்கள். 'நெகடிவ்'களுடன் படங்களைப் பத்திரமாக ஓர் உறைக்குள் போட்டு மன்றத்துக் காரியதரிசி முத்திரையுடன் ஸீல் செய்தனர் இருவரும்.

அவர்கள் அதைச் செய்து முடிக்கவும், சுரேஷின் தந்தை அவனைக் கூப்பிடுவதும் சரியாக இருந்தன!

''இந்தப் பணத்தைத் திருச்சி பாங்கில் கட்டிவிட்டு வருகிருயா சுரேஷ்?'' என்று கேட்டவண்ணம் அவனிடம் ஓர் உறையை எடுத்துக் கொடுத்தார். சுரேஷும் 'சரி' என்று கூறிவிட்டு அகன்ருன்.

மாலே மணி மூன்று. திருச்சிக்குக் கிளம்பத் தயாராஞன் சுரேஷ். ஏழு மைல்களேயும் சைக்கிளிலேயே கடந்துவிடுவதாகத் தீர்மானம் செய்திருந்தான் அவன். மேஞட்டு முறையில் அழகாக உடுத்திக் கொண்டு தலேயில் தொப்பியையும் சரியாக வைத்துக் கொண்டான். சைக்கிளினருகில் சென்றவுடன் தான் ஜிம்மியின் ஞாபகம் வந்தது அவனுக்கு. அதனிடம் ஓடிஞன். உடனே ஜிம்மியோ அவனிடம் பிடிபடாது ஓடத் தொடங்கியது. அவன் ஓட, ஜிம்மி ஓட ஆப்ரஹாம் லிங்கன் பன்றியைத் துரத்திய கதைபோல வேடிக்கையாக இருந்தது. சில நிமிஷங்கள் பந்தயத்தின் முடிவில் சுரேஷுக்கு வெற்றி - நல்ல வெற்றி! - ஜிம்மி அவன் கையில் சிக்கியது. மறுபடியும் அவன் கையிலிருந்து தப்பி ஓட முயன்றது அது. அதன் விளேயாட்டை ரசித்த வாறே சைக்கிளின் முன்பக்கம் வைத்திருந்த பிரம்புப் பெட்டியில் ஜிம்மியை வைத்தான் அவன்.

''ஜாக்கிரதையாகப் போய் வா,

சுரேஷ்'' என்று சேகரும், சுரேஷின் தந்தையும் ஒரு முகமாய்க் கூறினார்கள்.

ஆனந்தமாக ராகம் இழுத்த வாறே பெடல் செய்தான் அவன். சில மைல் தூரம் சென்றபின் தான் சைக்கிளில் வந்தது எவ்வளவு தவறு என்று புலப்பட்டது அவனுக்கு. மாலை வெயில்; கனமான உடைகள்; நெடுந்தூரம். இவ்வளவையும் சைக்கிளின் மூலம் சமாளிப்பதற்குள் அவனது உடலே நனைந்துவிட்டது.

ஆயிற்று, கம்பரசன்பேட்டையும் நெருங்கிக்கொண் டிருந்தது. இன்னும் இரண்டு மைல் சென்றால் திருச்சி எல்லையை அடைந்து விடலாம், என்று எண்ணியவாறு சைக்கிளின் வேகத்தைக் குறைத்தான் அவன்.

இரு பக்கமும் நீண்டு வளர்ந்திருந்த நாணற் புதர். ஜனசஞ்சாரம் குறைவாகவே இருந்தது. சைக்கிள் 'டக்'கென்று நின்றது.

அதனின்று கீழே இறங்கிய வாறே ஜிம்மியையும் இறக்க முயற்சி செய்தான் சுரேஷ். ஆனால் ஜிம்மி இறங்க மறுத்துவிட்டது மிகவும் கட்டாயப் படுத்தி இறக்கினான் சுரேஷ். சற்று நேரம் அருகில் இருந்த மதகில் அமர்ந்து இளைப் பாறிக்கொண் டிருந்தான்.

கீழே எதையோ மோப்பம் பிடித்துக்கொண் டிருந்த ஜிம்மி திடீரென்று பீதியுடன் சுரேஷைச் சுற்றிச் சுற்றி வந்தது.

அப்போது, எங்கிருந்தோ....

''டுமீல் டுமீல்....''

'வீல்' என்ற சப்தத்துடன் பரிதாபமாகக் கீழே சாய்ந்தது ஜிம்மி. சுரேஷ் தாமதிக்கவில்லை. அவனது ரிவால்வரும் குண்டு வந்த இடத்தை நோக்கி வெடித்துத் தீர்த்தது! பயனில்லை.

ஜிம்மியின் பின்கால் பட்டையிலிருந்து கொடகொடவென்று ரத்தம்! அடிவயிற்றிலும் குண்டு துளைத்துச் சென்றிருந்தது. ''ஐயோ ஜிம்மி!'' என்று அலறினான், அந்த வட்டாரமே எதிரொலிக்கும்படி. ''ஐயோ, ஜிம்மி, இந்த முடிவுக்குத்தானா உன்னைக் கட்டாயமாக அழைத்துவந்தேன்?'' என்று அவன் பரிதாபமாகக் கதறினான்.

உயிருக்குயிராக இருந்த ஜிம்மி, தற்போது வெறும் கட்டை....

சிறிது நேரத்தில் அங்கே கூட்டம் கூடிவிட்டது.

''எவனோ போக்கிரிப் பய செஞ்சிருப்பானுக!''

''எந்தத் திருடனாவது வஞ்சம் தீர்த்திருக்கணுங்க!''

''பாவம், நல்ல ஜாதி நாய். முடிவு இப்படியா ஆவணும்?'' பலர் பல விதமாக அபிப்பிராயம் கூறிக்கொண் டிருந்தனர்.

சுரேஷுக்குத் துக்கத்தை அடக்க முடியவில்லை. ''எனக்கு உயிரைக் கொடுத்துவிட்டு உன் உயிரை விட்டுவிட்டாயே'' என்று அவன் கதறியபோது கூட்டத்தில்

மாம்பழம் பாத்தியா?

போட்டோ: R. விசுவநாதன்

நின்றுகொண்டிருந்த அனைவர் கண்களிலும் நீர் நிறைந்துவிட்டது.

''தம்பீ, மேலே ஆகவேண்டியதைக் கவனி'' என்றார் ஒருவர். தற்செயலாக அங்கே காலியாக வந்துகொண்டிருந்த ஒரு 'டாக்ஸி'யை நிறுத்தி விஷயத்தைக் கூறினார்கள் அவர்கள். டிரைவரும் பச்சாதாபப் பட்டான். ஜிம்மியையும் சுரேஷையும் ஜீயபுரத்தில் கொண்டு விடச் சம்மதித்தான் அவன்.

ஜிம்மியின் உடல் காரின் பின் ஸீட்டின் அடியில் வைக்கப் பட்டது. சைக்கிளுக்கு ஓர் ஏற்பாடு செய்துவிட்டுக் காரில் ஏறிக்கொண்டான் சுரேஷ். கார் புறப்பட்டது.

ஜிம்மியைப் பார்க்கும் போதெல்லாம் அவன் அழுகை பீரிட்டது. சிரமப்பட்டு அடக்கிக்கொண்டான் அதை.

சைக்கிளில் சென்ற சுரேஷ் காரில் திரும்பியதைக் கண்டதும் சுரேஷின் வீட்டில் யாவரும் பதறிவிட்டனர். சேகரும் அச்சமயம் அங்கேதான் இருந்தான்.

டிரைவர் விஷயத்தைச் சொன்னதும் துடித்துவிட்டனர் அவர்கள். தம் சொந்த மகனைப் போலவே ஜிம்மியை வளர்த்த சுரேஷின் தந்தை சித்தப் பிரமை பிடித்தவர்போலவே ஆகிவிட்டார்.

அது உயிரோடிருக்கும் வரை ஒரு சிறு திருட்டும் அந்த வட்டாரத்திலேயே ஏற்பட்டதில்லை. எவ்வளவு பேரின் குதிகால் சதையைப் பதம் பார்த்திருக்கிறது அது?

ஒரு சமயம் அடுத்த ஊரில் மாடு ஒன்று திருட்டுப்போன போது ஜிம்மி தனது மோப்ப சக்தியால் இடண்டே மணி காலத்தில் துப்பைக் கண்டுபிடித்து விட்டதே!

இப்பேர்ப்பட்ட தீரனுக்கா மரணம்? ஊரிலுள்ள குழந்தைகள் அனைத்துக்கும் நெருங்கிய தோழனான ஜிம்மிக்கா மரணம்?

9. பெரிய மார்க்கெட்

சுரேஷ் இப்பேர்ப்பட்ட அதிர்ச்சியைத் தாங்கும் வலிமையுள்ளவனாக இல்லை. இந்த ஒரு நிகழ்ச்சியை அவன் கனவிலும் எதிர்பார்க்கவில்லையே. மேலும் ஜிம்மியின் பரிதாப முடிவுக்குத் தானே பொறுப்பாளி என்று அவன் உறுதியாக நம்பினான். சென்ற சில நாட்களாக அவன் மனத்தில் உள்ளூற இருந்த இனந்தெரியாத கலக்கம் கடைசியில் இப்படியா முடியவேண்டும் என்று துக்கப்பட்டான்.

சேகர்தான் அப்போதெல்லாம் சுரேஷுக்குப் பாதுகாப்பாக இருந்தான். அவனுக்குச் சுரேஷின் மனநிலை தெரியும். ஆகவே அவனும் மிகவும் ஜாக்கிரதையாகவே இருந்தான். சுரேஷிடமிருந்து ஏக்கத்தை விரட்டியடிக்கப் பெருமுயற்சி எடுத்துக்கொண்டான். எப்பேர்ப்பட்ட இன்னலாயினும், தாங்கும் வன்மையுள்ளவன் சேகர். தனது நெஞ்சைப் பாரையாக்கிக் கொள்ளும் திறன் உண்டு சேகருக்கு. அந்தத் திறமை தற்போது வெகுவாக உதவியது அவனுக்கு. இருவரும் தற்போது ஈடுபட்டிருக்கும் முயற்சி சாதாரணமானதல்ல என்பதைச் சமீபகால நிகழ்ச்சிகள் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. அந்த முயற்சியை ஒரு முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்று துடித்தான் சேகர்.

ஜிம்மியின் முடிவைக் குறித்து அவன் ஆழ்ந்த கவலையடைந்திருந்தாலும் அதைக் காட்டிக்கொள்ள தருணம் இதுவல்ல என்பதை உணர்ந்தான். ஜிம்மி உயிரை இழந்ததே ஒரு தியாகம்தான். அதற்கும் அவர்கள் முயற்சிக்கும் நெருங்கிய சம்பந்தம் இருக்கிறது. ஜிம்மியைக் குறித்தவாறு முயற்சியில் வெற்றிகாண வேண்டுமென்று சுரேஷைத் தூண்டினன் சேகர்.

* * *

ஜிம்மியின் முடிவில் கலக்கம் அடைந்தாலும் தயக்கம் அடையாதவன் சேகர். அதன் மரணத்திலும் ஏதாவது தகவல் கிடைக்குமோ என்று அறிய விரும்பினன் அவன். வழக்கம்போல், அந்தச் சடலத்தைச் சுவரில் சாய்த்து நிறுத்தியவண்ணம், படங்கள் எடுத்துக்கொண்டான் அவன். நீண்ட சைக்கிளின் ஸ்போக் ஒன்றை எடுத்துக்கொண்டு முதற் காயத்தினுள் நுழைத்தான் அவன், குண்டினல் எலும்பு நொறுங்கியிருப்பது நன்கு தெரிந்தது. சற்று சிரமத்துடன் சிறிது நேரத்தில் அந்தக் கம்பியை மறுபக்கத்தின் வழியாகக் கொண்டு வந்தான் அவன்.

பிறகு மறுபடியும் சற்றுக் கனமான கம்பிகளை உபயோகித்துக் காயத்தின் சரியான குறுக்களவைக் கண்டுபிடித்தான்.

பரிசோதனைகளில் அவன் உள்ளம் மரத்துப் போனதுதான் விந்தையிலும் விந்தை! போலீஸாரோ, டாக்டர்களோ இது போன்ற சம்பவங்களை எப்படி ஆராய்கின்றனர் என்பது அவனுக்குத் தெரியும்.

நல்ல மரியாதையுடன் ஊரின் பொது இடத்தில் அடக்கம் செய்யப்பட்டது ஜிம்மி. அது புதைக்கப்பட்டபோது சுரேஷ் மறுபடியும் தன் பொறுமையை இழந்து விட்டான். அவனைத் தேற்றுவது பெரும்பாடாகி விட்டது சேகருக்கு.

* * *

நான்கு நாட்கள் பறந்து போனதே தெரியவில்லை. சேகரோ தன் ஆராய்ச்சிகளின் விளைவாக ஒரு முடிவுக்கு வந்துவிட்டான். மர்ம வார்த்தையை விடுவித்து விட்டால் கடைசி நிமிஷத்தில் போலீஸாருக்குத் தகவல் கொடுக்கலாம் என்பது அவன் தீர்மானம். ஆனல் அந்த வார்த்தை எதைப் பற்றியதாக இருக்கும் என்பதையே அவனுல் தீர்மானிக்க முடியவில்லையே.

சுரேஷின் தந்தை அவனை மறுமுறை பாங்குக்கு அனுப்ப நடுங்கினர். சேகர்தான் அவரது பீதியைப் போக்கி, சுரேஷை அனுப்பத் தூண்டினன். தானும் அவனுடன் உடன் செல்வதாக முன் வந்தான். வீட்டிலேயே இருந்தால் சுரேஷின் மனநிலை திரும்பாது என்பது அவனுக்குத் தெரியும். தானும் அவனும் திருச்சி வரை சென்று வந்தாலாவது சற்றுப் பலன் ஏற்படலாமென அவன் நம்பினன். சுரேஷும் இதற்குச் சம்மதித்தான்.

இம்முறை இருவரும் ரெயிலில் செல்லத் தீர்மானித்தனர். எப்போதும் முன்னெச்சரிக்கையாகக் கெட்டித்த வெடி மருந்துடன் ரிவால்வரை எடுத்துக்கொண்டே புறப்பட்டான் சுரேஷ். சேகரும்

தகுந்த ஏற்பாடுகளுடன் சுரேஷைத் தொடர்ந்தான்.

* * *

திருச்சி, கோட்டை ஸ்டேஷனை வண்டி அடையும்போது மணி மூன்று. அங்கிருந்து பாங்கி நான்கு பர்லாங் தூரம்தான். ஆகவே நடந்தே சென்றனர் இருவரும். பாங்கிலும் அதிகக் கூட்டமில்லை. சென்ற அரை மணிக்குள் காரியம் முடிந்து விட்டது. உடனே ஊருக்குத் திரும்ப சேகருக்கு இஷ்டமில்லை. ஏன்? சுரேஷுக்கும் தான்.

'மெயின் கார்ட் கேட்'டில் பஸ்ஸைப் பிடித்து பெரிய மார்க்கெட்டை அடைந்தனர். அங்கும் அவர்களுக்குக் காரியம் இருந்தது. தங்களுக்குத் தேவையான பொருள்களை வாங்கியானதும் திரும்பினர் இருவரும். அப்போதுதான் ஒரு சம்பவம் நடந்தது.

சுங்கம் கட்டி மார்க்கெட்டினுள்ளே சென்று வியாபாரம் செய்ய முடியாத ஏழை அங்காடிக்காரர்கள் பலர் வெளியே ரோட்டின் ஓரமாக வியாபாரம் செய்துகொண்டிருந்தார்கள். மாம்பழக் கூடை முதல் சீப்பு, சோப்பு, கண்ணாடி வியாபாரி வரையில் பல தரப்பட்ட அந்த எளிய வர்த்தகர்கள் திடீரென அவசரப்பட ஆரம்பித்தார்கள்.

ஆம்..தூரத்தில் ஒரு மோட்டார் சைக்கிள்தான் வந்துகொண்டிருந்தது. ஆனால் அங்காடிக்காரர்களிலும் தொண்டுக் கிழங்கள் இருக்குமே!

ஒரு கத்தரிக்காய்க் கிழவி-பாவம் கண்ணும் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருந்தாள். காதும் அவ்வளவு பிரயோஜனமில்லை. மற்றவர்கள் ஓடுவதைப் பார்த்ததும் தானும் கிளம்ப ஆயத்தம் செய்துகொண்டிருந்தாள். 'திடீர்த் தீபாவளி' கிழவியின் அருகில் வந்தே விட்டது. அதைக் கிழவியின் சமீபம் கொணர்ந்து நிறுத்தினார், அதன் மேலிருந்த போலீஸ் உத்தியோகஸ்தர். ஒரு கணம்தான்; மறு நொடி ரோட்டின் ஓரமாகக் கத்தரிக்காய்கள் சிதறின நாலா புறமும். அவற்றில் ஒன்றை எடுத்தார் அந்த உத்தியோகஸ்தர். அவரது வலதுகை மோட்டார் சைக்கிளின் கைப்பிடியைப் பிடித்துக்கொண்டிருக்க, இடது கை கத்தரிக்காய் ஒன்றைக் கிழவியின் முதுகை நோக்கி வீசி எறிந்தது. அதே சமயம்,—

சேகரின் கண்கள் தன் கைக்கடிகாரத்தைக் கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்தது. "ஓடு கிழவி, இன்றொரு தடவை நான் இங்கே உன்னைப் பார்த்தால்?" என்று விரட்டிய வண்ணம் 'தீபாவளியை'க் கிளப்பினார் அந்த உத்தியோகஸ்தர்.

சாதாரண அருவருப்பான விஷயம்தான் இது! தினசரி நடக்கும் ஒரு சம்பவம்தான் இது. ஆனால் கிழவியின் வயதையும் போலீஸ் உத்தியோகஸ்தரின் செய்கையையும் கண்டு ஆத்திரப்பட்டான் சுரேஷ். அவரது செய்கை உசிதமாகப்படவில்லை அவனுக்கு. கிழவியைக் கிளப்புவதற்காக அவர் செய்த செய்கை நடமாடும் பாதசாரிகளுக்கும் இதரர்களுக்கும் கிழவிக்கும் இன்னும் சிரமத்தையல்லவா கொடுத்து விட்டது!

இருவரும் கிழவிக்கு ஒத்தாசை செய்வதில் முனைந்தனர். 'மோட்டார் சைக்கிளின்' நம்பரைக் குறித்து வைத்துக் கொண்டான் சேகர். போலீஸில் இதைப்பற்றி விசாரிக்க வேண்டும் என்பது அவன் அபிப்பிராயம். கடைசியில் சுரேஷ் தன் 'பர்ஸி'லிருந்து கிழவிக்குச் சுங்கச் சீட்டு வாங்கிக் கொடுத்து மார்க்கெட்டுக்குள்ளே அனுப்பினான் அவளை. அவளும் இருவரையும் மனதார வாழ்த்திக்கொண்டு உள்ளே சென்றாள்.

உத்தியோகஸ்தரின் செய்கை, யாருக்கு வெடி வைக்கப் போகிறதோ?

(தொடரும்)

நீங்களும் நானும்

[இந்தப் பகுதியில் உங்களுக்குத் தோன்றும் சந்தேகங்களையெல்லாம் கேட்கலாம். எனக்குத் தோன்றியவைகளைச் சொல்கிறேன். வேடிக்கை விளையாட்டுக் கேள்விகளாக இருக்கலாம்; ஆனால் பிறரைப் புண்படுத்தாத முறையிலும், கூடுமானவரையில் உங்களுக்குப் பயன்படக்கூடிய கேள்விகளாகவும் கேளுங்கள். —ஆர்வி.]

என். அம்புஜம், மாம்பலம்

கே: கடவுள் ஏன் கண்ணுக்குத் தெரியாமல் இருக்கிறார்?

ப: கடவுளுடைய பிரம்மாண்டமான சரீரத்திலே நாம் எங்கேயோ ஒரு துளியிலும் துளியாக ஒட்டிக்கொண்டிருக்கிறோம். நம்முடைய பார்வை அவருடைய முழு உருவையும் பார்க்கிற அளவுக்கு எட்டுவதில்லை. காற்றைக் கூடத்தான் நம்மால் பார்க்க முடியவில்லை. அதனால் காற்று இல்லை என்று அர்த்தமா? அதே போல் கடவுள் நிலமாக, நீராக, நெருப்பாக, வெளியாக, காற்றாக நம்மைச் சுற்றி இருக்கிறார்.

எஸ். ஏ. கேசவன், கு. கழுகாசலபுரம்

கே: கண்டொரு சொல்லும் காணுதொரு சொல்லும் பகரும் கயவர்கள் பலர் வாழும் இந்நாட்டில் 'காய்த்த விளை நெற்கதி' ரெனப் பணியும் அறிஞருக்கு உண்மையாகவே இடமில்லையா, என்ன?

ப: ஏன் இல்லை? மணி மண்டபம், ஞாபகார்த்த மண்டபம் எல்லாம் பின்னே எவருக்காக?

குமாரி பத்மினி, சென்னை-14.

கே: ஸினிரமாவுக்கும் ஸினிமாஸ்கோப்புக்கும் என்ன வித்தியாசம்?

ப: முக்கியமான வித்தியாசத்தை மட்டும் இங்கே கூறுகிறேன். ஸினிரமாவில் காட்சிகளையெல்லாம் தத்ரூபமாக நேருக்கு நேரே காண்பது போல் கண்டுவிடலாம். மூன்று பிலிம் சுருள்களை மூன்று ப்ரொஜக்டர்களில் போட்டு ஒரே சமயத்தில் ஒட்டி, திரையில் மூன்று பிம்பங்களும் ஒன்றோடொன்று இழைந்து விடும்படி ஓடுகிறது ஸினிரமா. ஸினிமாஸ்கோப் படம் ஒரே ப்ரொஜக்டரில்தான் ஓடுகிறது. இதுபற்றித் தனிக் கட்டுரை ஒன்று கண்ணனில் விரைவில் வெளிவர இருக்கிறது.

எஸ். சிவராமன், சிறுகுடி

கே: உலகத்திலேயே விமானம் முதலில் தோன்றியது எங்கே?

ப: மிகப் பழங்காலத்திலேயே இந்த நாட்டில் யந்திர விமானங்களை நியமித்தார்கள் என்பதற்கு ஆதாரம் இருக்கிறது. ஆகாச தந்திரம் என்ற விஞ்ஞான நூல் ஒன்றும் இருக்கிறது. ஆகாயத்தில் பறக்கக்கூடிய வாகனம் ஒன்றைக் கட்ட கி. மு. 2500-ஆம் ஆண்டிலேயே சீனா, எகிப்து முதலிய இடங்களில் முயன்றிருக்கிறார்கள். இப்போதுள்ள ஆகாய விமானத்தை முதலில் கண்டுபிடித்தவர்கள் ரைட் சகோதரர்கள்தான். அவர்கள் அமெரிக்கர்கள்.

ஸி. ரகோத்தமன், குடியாத்தம்

கே: நீங்கள் தேர்தலில் நின்றால் என்ன?

ப: நிற்பதற்கு என்ன? யாராவது டெபாஸிட் கட்டினால் நானும் நிற்கலாம். ஆனால் ஓட்டுப் போடுபவர் யார்? இப்பொழுதெல்லாம் பணபலம் இல்லாதவர்கள் தேர்தலில் நிற்பதும் ஒன்றுதான்; சந்தியில் நிற்பதும் ஒன்றுதான்.

கோ. ரா. வளர்மதி, கோவை

கே: நேருஜி ஏன் மீசை வளர்த்துக்கொள்ளவில்லை?

ப: குழந்தைகள் பிய்த்து எடுத்துவிடுவார்களே என்ற பயம் தான் காரணமாக இருக்க வேண்டும்.

குமாரி வள்ளியம்மை, புதுக்கோட்டை

கே: பூக்காமல் காய்க்கும் மரங்கள்—

ப: எனக்குத் தெரிந்தவரை ஆல், அத்தி, பலா.

கே. சாமிநாதன், மாதுங்கா

கே: உங்களுக்குப் பயமுறுத்தல் கடிதங்கள் வருவதுண்டா?

ப: உண்டு; என் மூளையைப் பற்றிச் சந்தேகப்படுபவர்களே அப்படி எழுதுகிறார்கள்.

எம். எஸ். வாசன், திருச்சி-3

கே: அமெரிக்காவின் தேசிய விளையாட்டு எது?

ப: பேஸ்பால்.

எஸ். ரஞ்சன். சதர்லாண்டு (இலங்கை)

கே: திராவிடர்கள் யார்?

ப: ஜாதிப் பகைமை பாராட்டுபவர்கள் அல்ல; பாரதநாட்டின் தென்பகுதியில் வசிப்பவர்கள்.

நந்தி, பைகமந்து, நீலமலை

கே: அழியாத பொருள் எது? அதன் இயல்பு என்ன?

ப: உண்மை, அதைக் காண்பது கூடக் கஷ்டமல்ல; கண்டும் அதை உணராமல் இருப்பதுதான் கஷ்டம்.

ஐயாறு, முத்துப்பேட்டை

கே: இந்தியாவில் முதல் முதல் வெளியான பத்திரிகை எது?

ப: பெங்கால் கெஜட். 1780-ஆம் ஆண்டில் கல்கத்தாவில் தோன்றியது.

எஸ். கணேசன், விண்டுலா.

கே: என் வயது 14. உயரம் 4 அடி 4 அங்குலம். உம்மால் நிறை கூற முடியுமா?

ப: முடியாது. 65 - இலிருந்து 70 பவுண்டுக்குக் குறையாமல் இருப்பது நல்லது என்கிறார்கள் டாக்டர்கள்.

ஆர். கோவிந்தராஜன், மேச்சேரி

கே: சிலர், 'நாலு பேர் என்ன சொல்வார்கள்?' என்கிறார்களே. அப்படி 'நாலு' என்று குறிப்பிடக் காரணம் என்ன?

ப: உலகத்தார், ஊரார், உற்றார் உறவினர் என்று நம்மைச் சுற்றியுள்ளவர்களைக் குறிப்பிட வந்தது என்று நான் கேட்டறிந்தவரையில் சொல்கிறேன்.

எம். முருகையன, வக்கிர நல்லூர்.

கே: பத்திரிகை வந்ததும் ஓசியிலே படிக்கும் எனது நண்பர்கள் எல்லாம் எங்கள் வீட்டில் வந்து குவிந்து விடுகிறார்கள். இதைச் சமாளிக்க ஒரு சிறந்த வழி சொல்லுவீர்களா?'

ப: தலைக்கு, மாதத்துக்கு இத்தனை சந்தா என்று சொல்லி, ஒரு வாசகசாலை ஆரம்பிக்கப் போவதாகச் சொன்னால் போதுமே!

கே. சந்திரா, மாமா குடி

கே: டாடா கம்பெனி எப்போது ஆரம்பமாயிற்று?

ப: டாடா இரும்பு எஃகுக் கம்பெனி 1907 - இல் ஸ்தாபிதமாயிற்று. 1911 - 12 இல்தான் உற்பத்தி தொடங்கியது. அதைத் தொடங்கியவர் ஜம்ஷேத்ஜி நுஸர்வான்ஜி டாடா.

எம். தர்மலிங்கம், வெலிமடை

கே: நோபெல் பரிசு பெற்ற விஞ்ஞானி ஸர் ஸி. வி. ராமன் எப்போது, எதைக் கண்டு பிடித்தார்?

ப: கட்டி, திரவம், வாயு இப்படி உள்ள ஒரு பொருளினால் ஒளி சிதறும்போது கிரண வெளியீடு (ரேடியேஷன்) ஏற்படுகிறது. இதைத்தான் ராமன் விளைவு என்கிறார்கள். 1928 - இல் அவர் இதைக் கண்டு பிடித்தார்.

பி. என். எஸ். மூர்த்தி, சின்ன காஞ்சீபுரம்

கே: இந்தியாவில் மொழிவாரி ராஜ்யங்கள் யாவை? எப்போது அவை ஏற்பட்டன.

ப: ஆந்திரா, அஸ்ஸாம். பீஹார், பம்பாய், கேரளா, மத்திய பிரதேசம், சென்னை, மைசூர், ஒரிஸ்ஸா, பஞ்சாப், ராஜஸ்தான், உத்திரப் பிரதேசம், மேற்கு வங்கம், ஜம்மு-காஷ்மீர் ஆகிய 14 ராஜ்யங்கள். 1956 - நவம்பர் முதல் ஏற்பட்டவை.

எ, மிர்ஸா இஸ்மாயில், தென்காசி

கே: மன்காட், குப்தே, லேக்கர், பஸல் முகம்மது, குலாம் இவரில் சிறந்த பௌலர் யார்; வரிசைப்படுத்திச் சொல்லவும்.

ப: குப்தே, குலாம், மன்காட். லேக்கர், பஸல்.

சுல்தான் அகமது அன்சாரி, தென்காசி

கே: கிரிக்கெட் விளையாட்டைப் பற்றித் தங்கள் கருத்து என்ன?

ப: என் கருத்து இருக்கட்டும். ஆனால் அதற்குமுன் இந்தியாவின் வைசிராயாகவும் பிரிட்டிஷ் சேனைத்தளபதியாகவும் இருந்த லார்டு வேவல் சொன்னது இது. 'வேலை மெனக்கட்டு இருபத்திரண்டு பேர் வெயிலில் நின்று விளையாடுவதை வேலை மெனக்கெட்ட இருபத்திரண்டாயிரம் பேர் பார்க்கும் விளையாட்டுத்தான் கிரிக்கெட்' என்றார். நாம் கிரிக்கெட்டை அளவு கடந்து உயர்வாக, உயிராக எண்ணுவது சரியல்ல என்றுதான் எனக்குப் படுகிறது. அருமையான விளையாட்டுக்கள் பல உண்டு. புட்பால், பாட்மின்டன். டென்னிஸ், ஹாக்கி இவையெல்லாம் இல்லையா?'

இளஞ்சோழன், திட்டச்சேரி

கே: ஓர் அறிவிலி பல அறிவாளிகளைக் கட்டி ஆள முடியுமா? அல்லது ஓர் அறிவாளி பல அறிவிலிகளைக் கட்டி ஆளமுடியுமா?

ப: முன்னால் சொன்னபடி நிச்சயம் முடியும். அறிவு வேறு; ஆள்வது வேறு. ஆளத்தெரிந்தவனுக்கு அறிவு வேண்டும் என்பதும் அறிவாளிக்கு ஆளத்தெரிய வேண்டும் என்பதும் இல்லை.

எஸ். சீதாலக்ஷ்மி, பம்பாய்-39.

கே: நம் உடலில் உயிர் எந்த இடத்தில் இருக்கிறது?

ப: உயிர் என்பது ஒரு ஸ்தூலமான வஸ்துவல்ல. ஆனால் பிராண வாயுவை ரத்தக் குழாய் மூலம் ஊட்டச் செய்யும் இருதயமும் சுவாசப் பையும் சேர்ந்த இடத்தில் தான் உயிர் இருக்கிறது என்று சொல்லலாம்.

எம். பி. ராமசாமி, புதூர்

கே: சினிமா பற்றிய கேள்விகளுக்குப் பதில் சொல்ல விரும்பவில்லை என்று அறிவித்தீர்கள். சரி; அரசியலைப்பற்றியாவது பதில் கூறுவீர்களா?

ப: சினிமாவைப் போலவே மாணவர்களுக்கு அரசியலும் அவசியமில்லைதான். ஆனால் இரண்டிலுமே நீ கற்க வேண்டியது, தெரிந்து கொள்ள வேண்டிய நுட்பங்கள் பல இருக்கின்றன. நடிகர், நடிகை விலாசம், பட விமர்சனம் இதெல்லாம் உங்களுக்குத் தேவையில்லை. அதே போல அரசியலிலும் ஜயிப்பவர், தோற்பவர், ஆள்பவர், ஆளப்படுவோர் என்றெல்லாம் அக்கப் போர் வேண்டியதில்லை. ஆனால் அரசியல் ஞானம் தரும் படிப்பு இருக்கிறதே அது அவசியம். அதே போல காமிரா, ஸ்டூடியோ, ஒளிப்பதிவு, இயற்கை வர்ணம், பிலிம் கழுவும் லாபரேடரி இதெல்லாம் பற்றி நீ தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம். சினிமாவில் சேர்ந்து நீ நடிப்புக்கலையில் கூடத் தேர்ச்சி யடையலாம். அது தப்பு இல்லை. அக்கப்போர், வம்பளப்பு, பிறருடைய அந்தரங்கங்களைக் கேட்டு ரஸிப்பது. நையாண்டி செய்வது இதெல்லாம் அவசியமா?

அவரைத் தெரியும். ஆனல்...

ந. ராமானுஜன்

'திருவனந்தபுரம் பாஸ்ட் பாஸஞ்சர்' சிதம்பரம் ஸ்டேஷனில் நின்றது. வண்டியிலிருந்து இறங்குவோரும், வண்டிக்குள் ஏறி இடம் பிடிப்போருமாக ஸ்டேஷன் ஒரே பரபரப்பாகக் காணப்பட்டது.

ரெயில் மீண்டும் புறப்படுவதற்கான கடைசி மணியும் அடித்தாகி விட்டது. தெய்வாதீனமாக, நான் உட்கார்ந்திருந்த பெட்டிக்கு இன்னும் ஒருவரும் வராதது குறித்து ஆச்சரியப்பட்டுக்கொண் டிருக்கையில், என் எண்ணத்தின் தலையில் இடி விழுவது போன்று, ரெயில் நகர்ந்து விட்ட அந்நிலையில், தாவி ஒருவர் நான் உட்கார்ந்திருந்த பெட்டிக்குள் வியர்க்க விறுவிறுக்க நுழைந்தார்.

ஒரு பெரிய மல்யுத்தத்தில் வெற்றி பெற்ற வீரனின் மார்பு ஏறித்தாழ்வது போல, அவருடைய விசாலமான மார்பு உயர்வதும் தாழ்வதுமாக, அவர் அதுகாறும் பட்ட சிரமத்தை எனக்குப் பறை சாற்றியது. அலட்சியமாக ஒரு புன்னகையை என்மீதும், என் பக்கத்தில் அமர்ந்திருக்கும் 'கிருதா மீசைக்காரர்' மீதும் வீசியபடியே எதிரிலிருந்த ஆசனத்தில் அமர்ந்தார். அந்த விநோதப் பிரயாணியை, ஒரு முறை ஆச்சரியத்துடன் உற்று நோக்கிய நான், ரெயில் பிரயாணத்தின் அலுப்பு காரணமாக லேசாகக் கண்ணை மூடினேன்.

சிறிது நேரத்திற்கெல்லாம் என் அருகில் பேச்சுச் சத்தம் கேட்கவே, என் அரை குறை தூக்கத்திற்குத் தற்காலிகமாக முற்றுப்புள்ளி வைத்துவிட்டு, என்ன பேசுகிருர்கள் என்று கவனிக்க ஆரம்பித்தேன்.

ஆம்; புதிதாக ஏறிய அந்தப் பிரயாணிதான் என் பக்கத்திலிருந்த கிருதா மீசைக்காரருடன் பேச்சுக் கொடுத்துக் கொண்டிருந்தார். கிருதா மீசை என்ருல், லேசுப்பட்ட மீசை என்று நினைத்து விட்டீர்களா? அப்பா, குடலைப் பிடுங்கித் தின்னும் 'ராவண மீசையாச்சே, அது! பக்கத்திற்கு ஒரு எலுமிச்சம்பழம் செருகலாம் போலல்லவா அவ்வளவு மிடுக்காகக் காட்சி யளித்தது! மீசையைப்பற்றி நான் வர்ணித்துக்கொண்டே போகப் போக, தம்பிகளே, அவ்விருவரும் என்ன பேசிக்கொண்டார்கள் என்று தெரிந்து கொள்ளும் ஆசை உங்களுக்கு வளர்ந்துகொண்டே போகும்! அதனுல், 'என்ன பேசினுர்கள்?' என்பதைப் பார்ப்போம்.

''என்னங்க! நீங்க எதுவரைக்கும் போறீங்க?'' - புதியவரின் கேள்வி இது.

''தஞ்சாவூர் வரையில் போகிறேன்''—இது பயங்கர மீசைக்காரரின் பதில்.

''அடடே, நான்கூட அங்கிட்டு தாங்க பயணப் பட்டிருக்கேன்! அதிருக்கட்டுங்க, ஐயாவுக்கு அவ்விடத்திலே எங்கே ஜாகை?''

'''சம்பங்கி பவனம்'னு கேள்விப் பட்டிருப்பீங்களே, தஞ்சாவூரிலே! கேள்விப்படாதவங்க இருக்க முடியாது; அதிலேயும் நீங்க அதே ஊருங்கிறீங்க!''

''நல்லாச் சொல்லிட்டீங்க, போங்க! எனக்கு நல்லாத் தெரியுமுங்களே, 'சம்பங்கி பவன'த்தின் எஜமானர் சோமசுந்தர முதலியாரை! அவுங்களுக்கு ஐயா என்ன உறவுக்காருங்களா?''

''அவருதான், எங்க அப்பாரு!''

''நினைச்சேன்; உங்க முகசாடையிலிருந்து ஐயாவைப் பார்த்தது முதலே, 'எங்கிட்டோ, பார்த்த முகமா இருக்கே'ன்னு 'யோஷனை' பண்ணிக்கிட்டுதான் இருந்தேனுங்க! அப்படிங்களா, தாங்க அவரு மகனுங்களா? ஹி - ஹி - ஹி ரொம்ப சந்தோசங்க!''

எனக்கு இருந்த அரைகுறைத் தூக்கமும் இந்த மணிப்பிரவாளத் தமிழ் நடையைக் கண்டு அதிசயித்து, நிரந்தரமாகவே விடை

பெற்றுக்கொண்டு விட்டது! 'மேற்கொண்டு என்ன பேசுகிறுர்கள்' என்று காதைத் தீட்டிக் கொண்டேன்; இம்முறையும் அந்தப் புதியவர்தான் பேச்சைத் துவக்கினுர்:-

''ஏங்க; அப்போ, தங்களுக்கு வக்கீல் பொன்னுசாமி ஐயாவைத் தெரியுமுங்களா?''

''நல்லாக் கேட்டே, போ! தெரியுமாவா? சரியாப் போச்சு: எனக்கு ரொம்ப நல்லாத் தெரிஞ்சவராச்சேப்பா!''

''அப்படிங்களா; எசமான்! தாங்க, எனக்கு ஒரு உபகாரம் செய்ய வேணும்!''

இந்தச் சந்தர்ப்பத்தில், ஒய்யாரமாகத் தன் மீசையை முறுக்கி விட்டபடியே முதுகை நிமிர்த்தி உட்கார்ந்தார் கம்பீரமாக, என் பக்கத்திலிருந்த ஸ்ரீமான் கிருதா!

''அட, சும்மா சொல்லுப்பா! என்னுலே, உனக்கு என்ன வேணும்னுலும் பயப்படாமெச் சொல்லு; நான் செய்யறேன்!''

''எனக்கு ஒரு மவனுங்க; பட்டணத்துலே, இந்த வருசம் ஐஸ்கூல்லே, கடைசிப் பரீச்சை எழுதி முடிச்சுட்டுதுங்க; அதாங்க எச்செச்செல்சியோ, இயெச்செல்சியோ, என் வாயிலே அது எங்கே உருப்படியா நுளையப் போவுதுங்க! அடுத்த வருசம் என் மவனேக் காலேஜிலே சேர்க்கணுங்க! இந்தக் காலத்திலேதான் சிபார்சு இல்லாமெ எந்தக் காரியமும் நடக்காதுன்னு சொல்லுருங்க! உங்களுக்குத்தான் தெரியும்னு சொல்றீங்களே! ஐயா பெரிய மனசு பண்ணி ஏழைக் குடிசையிலே விளக்கேத்தணுங்க; தயவு செய்வீங்களா?'' என்று பரிதாபமாகத் தன் சோக வரலாற்றைக் கூறினுர் அந்தப் புதியவர். உண்மையிலேயே, அவர் கண்களில் இருசொட்டு நீர்த்திவலைகள் துளித்திருந்தன.

இந்த ''ஷோக் மைனர்'' என்ன சொல்லப் போகிறுர் என்று என் உள்ளம், புகை வண்டியை மிஞ்சும் வேகத்தில் படபடத்துக்கொண்டது.

கம்பீரமாகத் திருவாய் மலரத் தொடங்கினுர் நம் ஸ்ரீமான் கிருதா அவர்கள்:-

''நீ சொல்வதெல்லாம் சரிதாம்பா! முயற்சி பண்ணுவதில் யாதொரு தடையுமில்லே! ஆனுல்..'' என்று இழுத்தாற்போல் நிறுத்தினுர் ஸ்ரீமான் கிருதா!

எனக்கு இவர்களுடைய மணிப்பிரவாள நடையைக் காட்டிலும் 'கிருதாப் பேர்'வழியின் பேச்சின் ஆரம்பத்தில் காணப்பட்ட

'வாங்க, போங்க' என்ற மரியாதையான வார்த்தைகள் போகப் போக, 'சரிதாம்பா, சொல்லுப்பா' என்று வந்து முடிந்ததை எண்ணுகையில் என்னையும் மீறி என்னுள் சிரிப்பு எழுந்தது. அதை அடக்கிக் கொண்டு, எக்கச்சக்கமான கட்டத்தில் உபயோகிக்கப்படும் இந்த 'ஆனல்' என்ற பதத்தை மனதாரத் திட்டிக் கொண்டு, மேற்கொண்டு எவ்வாறு அந்தப் புதியவருக்கு அபயம் அளிக்கப்போகிறர், என்று கவனிக்கத் தொடங்கினேன்!

''என்னங்க எசமான்! சீக்கிரம் சொல்லுங்க; 'ஆனல்'னு திடீர்னு நிறுத்திட்டீங்களே!'' என்று என்னை விடப் பறந்தார், அப்புதியவர்.

''எனக்கு நன்ருகத் தெரியும் வக்கீல் பொன்னுசாமியை! ஆனல், அவருக்கு என்னைத் தெரியாதே! என்னைப் பார்த்ததுகூடக் கிடையாதே அவர்!''—என்று சாவகாசமாக மொழிந்தார் 'கிருதா!'

அதிர்ச்சித் தாளாது, அப்புதியப் பிரயாணி அப்படியே ஆசனத்தில் மயங்கிச் சாய்ந்தார்!

இதற்குள் மாயவரம் ஸ்டேஷனில் வண்டி நின்றது. பரபரப்புடன் கீழே இறங்கினேன்.

வண்டியை விட்டு இறங்கிய பின்னரும், என் வாய், 'நல்ல வரட்டு ஜம்ப ஆசாமி!' என்று முணு முணுத்தது.

வசந்தப் புது வருடம்!

வசந்தகாலம் வந்த(து) இங்கே,
அசைந்து தென்றல் போலே;
கசந்த வாழ்விலே இனிமை சேர்க்கக்
கடவுள் அருளாலே!
மாமரமும் தேன்மருவும்
பூமரமாய் விரியும்;
தாமரையின் பூமருவத்
தாவி அன்னம் திரியும்!
வீட்டில் வைக்கும் வேம்புரசக்
கூட்டும் மிக இனிக்கும்;
ஆட்டிக்கையை எங்கள் கண்ணன்
அதனை வாயில் திணிக்கும்!
பொன்மழையோ, நன்மழையோ,
புதுமழைதான் சொரியும்;
பன்மழையில் குயில்கள் ஆலா
பனைக்கச்சேரி புரியும்
புதுவருடம் பிறந்ததிங்கே,
பொதுவில் அனைவருக்கும்;
விதம்விதம்பேரானந்தம்ஹே -
விளம்பி ஆண்டு பெருக்கும்!
புதிய எண்ணம் உதயமாச்சு
புதுவருடத் தோடே;
அதையுறுதியாம் செயல்முடித்தால்
அப்புறம்யார் ஈடே?

—தமிழழகன்

ஆவணக் காப்பக ... சென்னை-600 008
211806

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE M. L. J. PRESS PRIVATE LTD., MADRAS-4.
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.